

# ரமணோதயம்

அக்டோபர் 2016
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகால்
கருதிடக் கொலாமலே கொல்லும்
அருமருந்து ஒன்றுஉண்டு அவனியில் அதுதான்
அருணாமா திரமென அறிவீர்

- (அருணாசல பதிகம், 11)


Pranams from

**SRIPAD STEELS PVT. LTD.,**

**Chennai**

உதயம் 16 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2016

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2016


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | தணல் மலையின் தண் சுனை | ரா. கணபதி | 18 |
| 3 | ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே | சு. பரமேஸ்வரன், கோவை | 26 |
| 4 | ஒப்பிலா மணியே ரமணா! | பிர. கிரிதர ஜெகதீஷ் | 33 |
| 5 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 40 |
| 6 | இனிவரும் திருநாட்கள் | | 43 |
| 7 | பேரமைதி நிலவிய திருநாட்கள் - 1 | மௌனி சாது | 44 |
| 8 | பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம் | கௌதமன் | 47 |
| 9 | அக்ஷர மணமலை - ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 3 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 56 |
| 10 | தன்னெஞ்சு அறிவது பொய்யற்க | ராம் மோஹன் | 65 |
| 11 | செய்திகள் | | 73 |

# ஆசிரியர் உரை

## அபின்னமாய் அருளும் அலகிலாத் தலைவன்

பகவானின் பேரருட் திறத்தைக் குறித்து கவியோகி சுத்தாநந்த பாரதி மிக அழகாகப் பாடுகிறார்:

*ஊனாகி என் உளமாகி என்*
*உணர்வாகிய ஒருவன்*
*நானார் என ஆராயுழி தானாகிய முதல்வன்*
*மோனானந்தப் பெருவெள்ளத்தில்*
*முழுகித்திளை முதல்வன்*
*தேனார் பொழில் அண்ணாமலை*
*திகழும் குரு பரமன்*
*சகசத் தனி இதயத்தமர்*
*சத்தாகிய ஒருவன்*
*சகசித்திர விளையாடலைச் சலனப் படம் எனவே*
*சுக நித்திரை தனில் காண்பவன்*
*சொல்லாமறை வடிவோன்*
*முகபத்தும மது உண்டதும்*
*முளைஅற்றது என் வினையே.*

ஆம்! நமது வினைத் தொகுதியின் அடிவேரினை அறுக்கும் வழி, பகவானது நயனத் தாமரைகளைக் கண்டு இடைவிடாமல் அவ்வருள் பிரவாகத்திலேயே திளைப்பதுதான் ஐம்பத்து நான்கு ஆண்டுகள் அருணாசலத்தைவிட்டு நகராமல் இருந்தவர். எங்கும்

சென்று பிரசாரம் செய்யவோ மக்களைத் திரட்டி இயக்கம் நடத்தவோ இல்லை. ஆயினும், தாயுமானவர் கூறுவதுபோல், "இருந்ததனை இருந்ததுபோல் இருந்துகாட்டி", அசலமாய் இருந்து தன் அளவிடற்கு அரிய ஆத்மசக்தியால் அகிலத்தின் நன்மைக்குத் தேவையானவற்றை அளித்தருளும் அவதார புருஷனே நம் பகவான். இவ் வருட்சக்தி எத்தகைய வெளித் தூண்டுதலும் இன்றி இயல்பாகவே வெளிப்பட்டது. இன்றும் வெளிப்பட்டு வருகிறது. ஒருவர் ஸ்ரீபகவானிடம் "தாங்கள் ஏன் உலக நன்மைக்காக ஊர் ஊராகச் சென்று திவ்ய ஞானத்தை மக்களுக்கு ஏன் போதிக்கக்கூடாது?" என்று கேட்டார். பகவான் அதற்கு ஓர் ஆச்சரியமான விடை கூறினார்: "உடலின் முயற்சியே இன்றி, உள்ளத்தில் இருந்து பிரதிபலிக்கும் ஆத்ம சக்தியால் அகில உலகத்தையும் அணைத்துக் காக்கும் அற்புதத் திறன் இங்கிருந்து கதிர்வீச்சாகப் பரவி வருகிறது. தன்னை எண்ணுவோர்க்கு எல்லாம் வெளிச் செல்லும் மனதை உள்நோக்கித் திருப்பி இதயத்தே நிலைக்கச் செய்து, எல்லையற்ற ஆத்மானந்தத்தில் திளைக்கச் செய்கிறது.

"இருந்த இடத்தில் இருந்து உலகை
என்றும் இழுப்போய் இறைஉருவே"

(ஸ்ரீ ரமண சஹஸ்ர நாமம்)

தமிழ் மொழி அறிவே அற்றவர்க்கும் உள்ளே புகுந்து ஆத்ம ஒளி தந்தது. இதற்கு நிதர்சன எடுத்துக்காட்டாக நேபாளத்திலிருந்து வந்திருந்த, நேபாள மொழியைத் தவிர வேறு மொழியே அறியாக கூர்க்கா ஒருவர் பகவான் சந்நிதியில் சிறிதுநேரம் நின்றிருந்தபோது, தனது அருட்பார்வையினாலேயே அந்த கூர்க்கா வீரருக்கு ஆத்ம ஞானத்தினை வழங்கிய நிகழ்வு வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

அசலமாய் எழுந்த அருணசிவம் இருந்த இடத்தில் இருந்தபடியே இருபெரும் தேவர்களின் அகந்தையை அடக்கியது.

"என்னிகர் எவரும்இல் என்று இருவரும் இகலும்போது
அன்னவர் முன்னே தோன்றி அடிமுடி காணாதுஆகி
உன்னுவர் தங்கட்கு எல்லாம் உயர்வுறு முக்தி நல்கித்
தன்னிகர் இன்றித் தோன்றும் தனிப்பெரும் அருண சைலம்,"

என்று கந்தபுராணம் பாடுகிறது. அதுபோன்றே, இருந்த இடத்தில் இருந்தபடியே, தன்னை எண்ணுபவர்க்கு எல்லார்க்குமே உயர்ந்த முக்தி நிலையை அருள்பவர் ஸ்ரீரமண பகவான். அருணாசலமே ஸ்ரீரமணர். ரமணரே அருணாசலம்.

பகவான், டி.என். கிருஷ்ணசுவாமியிடம் "நாம் எவ்வாறு உடலை நான் என்று அபிமானிக்கிறோமோ அவ்வளவு பிரியமாக சிவபிரான் இவ்வருணாசல மலையைத் தனது தூல வடிவத் திருமேனியாய் 'நான்' என்று அபிமானிக்கிறான்" என்று கூறினார்.

'வெளிவிட்டேன் உன் செயல்' என்று பகவானே அக்ஷரமணமாலையில் கூறுவதுபோல் 'அருணாசலமும் தானும்' ஒன்றுதான் என்ற பேருண்மையை வெளிப் படுத்துகிறார். மேலும் "ரமணன் என்று உரைத்தேன்: ரோசம் கொள்ளாது என்னை ரமித்திடச் செய்ய வா' என்று 90ஆவது கண்ணியில் அருணாசலனை அழைக்கும்போது, ரமண-அருணாசல அபேதத்தை உணர்த்துகிறார். இறுதியில் முடிக்கும்போதும் 'மாலையளித்த அருணாசல ரமண' என்றே விளித்து அருணாசலமும் ரமணரும் பிரிக்கமுடியாத ஒன்றே என்று சுட்டுகிறார்.

நீவேறு எனாது இருக்க
நான் வேறு எனாது இருக்க
நேராக வாழ்வதற்கு உன் அருள்கூர

என்று அருணகிரிநாதர் குறிப்பிடும் இவ்வுண்மையை பகவான் அழகுறச் சித்திரிக்கிறார்.

சொல்லையும், அதன் பொருளையும் தாண்டிய பரிபூர்ண ஞானமே ரமணர். பின்னமற்ற, பாகுபடற்ற இரண்டற்ற பரிபூர்ண ஞானமே மௌனம். தக்ஷிணாமூர்த்தியின் மௌனம் பகவானின் மௌனம். அந்த முழு மோனத்தினின்று கிளைத்து எழும் பிரதிபிம்பமே மனம், அல்லது சிற்றறிவு, அல்லது அகந்தை என்னும் முதல் எண்ணம். இவ்வெண்ணத்திலிருந்தே சொல் உதிக்கின்றது. சொல் பின் எழுத்து வடிவுபெற்று வாக்கியங்களாகி நூல்களாக விரிவடைகின்றது. எனவே வெறும் நூல்களைப் பயில்வதைக் காட்டிலும், அவற்றின் மூல வடிவாகிய முழு மோனத்தில் மூழ்கி ஞானம் பெறுவதே சாலச் சிறந்தது. அத்தகைய பரிசுத்த மௌனமே பகவானின் திருச்சந்நிதி; பல சமயங்களில் கேள்விகள் பலவற்றுடன் பகவான் சந்நிதிக்கு வந்தவர் பலர், அக்கேள்விகளைக் கேட்குமுன்னரே மனதில் எழுந்த ஐயங்கள் தீர்ந்துபோய், பேரறிவில் மூழ்கி விடுவதுண்டு. இதுவே பகவானின் மாட்சி பொருந்திய மௌன உபதேசத்தின் சிறப்பு. இதைக்கண்டு வியந்த அன்பர், "எப்படித் தங்கள் முன்னிலையில், கேள்விகள் எழும்புமுன்னரே, ஐயங்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன?" என வினவினார். பகவான் "சொரூபத்தில் நிலைத்திருத்தலே சகல சக்திகளும் ஆம். பிறர்க்கு அறிவுறுத்த ஞானி ஒருவனது ஆத்ம சாட்சாத்காரமே போதும். குரு இருந்தபடி இருக்கிறார். அருள் எல்லாரிடமும் தாண்டவம் புரிகின்றது" என்றார். எல்லோர் உள்ளத்தே விளங்கும் ஆத்ம சாட்சாத்கார உணர்வே பகவான் ஸ்ரீரமணர் அவரது சந்நிதியில் அகங்காரம் தானாகவே அடங்குகிறது. அந்த அகந்தை அடங்கும்போது, அதனால் தூண்டப்பட்டு எழுந்த சந்தேகங்களும் அழிகின்றன.

*சத்குருவின் சந்நிதி விசேஷத்தால் ஞானம் உதிக்கின்றதே தவிர, நமது முயற்சியால் அல்ல. லாவோட் ஸே கூறுகிறார்: "நான் மிகவும் கடினமாக முயற்சி செய்தேன். ஆனால் நான் மீண்டும், மீண்டும் அதிர்ஷ்ட வசமாகத் தோல்வி அடைந்தேன். எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை, என்னை ஒரு தனி மனிதனாகக் கருதிக்கொண்டு, போராடிக்கொண்டு இருந்தேன். பிரபஞ்ச சக்திகளை வெற்றிகொள்ள முயன்றேன். நான் இந்தப் பிரபஞ்சத்தின் பகுதி என உணர்ந்ததும், இப்பிரபஞ்சமும் என்னுள்ளே உள்ளது என்று உணர்ந்தவுடன் எனது போராட்டம் நின்றுவிட்டது. நான் ஒரு காய்ந்த சருகு போன்று ஆகிவிட்டேன்."*

*காய்ந்த சருகு என்ற உதாரணம் சிறப்பு மிக்கது. காய்ந்த சருகுக்கு எதன்மீதும் பற்று இல்லை. காற்று எப்படி வீசுகின்றதோ அப்படியே காய்ந்த சருகும் செல்கிறது. அது 'நான் தெற்குப் பக்கம் போகவேண்டும்' என்று சொல்வதில்லை. காற்று அடித்து அதனை உயரே தூக்கிச் சென்றால், 'நான் எல்லாரைக் காட்டிலும் மிகுந்த உயரத்தில் உள்ளேன்' எனப் பெருமிதப் படுவதில்லை. காற்று நின்று கீழே விழுந்தாலும் அதற்காக அது வருத்தப்படுவதில்லை. அதற்கு எந்த நோக்கமும் அறவே இல்லை. அதுவே பற்றற்ற ஞானியின் நிலை.*

*ஒரு ஜென் துறவி. வயதானவள். ஓர் இரவில் ஒரு மூங்கிலின் இருமுனைகளிலும் இரண்டு தண்ணீர் நிரம்பிய பானைகளைக் கட்டிக்கொண்டு, தன் தோளில் சுமந்துகொண்டு வந்துகொண்டு இருந்தாள். அவள் தான் எப்படி சாயுஜ்யம் அடைவது என்பது பற்றிச் சிந்தித்துக்கொண்டு இருந்தாள். வானத்தில் முழுநிலா பிரகாசித்துக்கொண்டு இருந்தது. திடீரென்று அவள் தோளில் இருந்த மூங்கில் கம்பு உடைந்து இரு மண்பானைகளும் தரையில் விழுந்து உடைந்தன.*

அதிலிருந்து தண்ணீர் தரையில் ஓட ஆரம்பித்தது. அவ்வளவுதான்! அப்பெண்மணிக்கு அக்கணமே ஞானம் சித்தித்து பேரானந்தத்தில் நடம் ஆடத் தொடங்கி விட்டாள். மடத்துள் அவளுடன் இருந்த மற்றத் துறவிகள் என்ன நிகழ்ந்தது என வினவினர்.

அவள் சொன்னாள்: இந்த இரண்டு பானைகளும் நீர் நிரம்பி இருந்தன. அவற்றுள் நிலா பிரதிபலித்துக்கொண்டு இருந்தது. பானைகள் விழுந்து சுக்கலாக உடைந்தவுடன் அவற்றுள் இருந்த தண்ணீர் வெளியே ஓடிற்று. அதில் பிரதிபலித்துக் கொண்டு இருந்த நிலாவும் மறைந்து விட்டது. நிலா வானில் இருந்தது. பிரதிபலிக்கும் தண்ணீரில் இருந்து மறைந்தது. நான் உண்மையை அறிந்து ஞானம் பெற்றேன்.

சிதறி விழுந்த பானையின் சிதறும் ஓசை ஒரு மந்திரச் சொல்போல் செயல்பட்டது. இந்த உடலும் மண்ணால் ஆனதுதான் உள்ளிருந்த தண்ணீர் வெளியே ஓடி விட்டது. தண்ணீரை சிறைப்படுத்த 'அங்கே' எதுவுமில்லை. அதன் தன்முனைப்பு முற்றிலும் மறைந்துவிட்டது. அது பிரபஞ்சத்துடன் ஒன்றாகிவிட்டது. இதுதான் உண்மையான நிலா. வெறும் பிரதிபலிப்பு அல்ல. ஆத்மாவாகிய 'தான்' ஒன்றே அழிவற்ற ஒன்று. மற்றவை அனைத்தும் பிரதிபலிப்பே மண்பானையில் இருந்த தண்ணீர் நிலவைப் பிரதிபலித்து மண்ணான உடலில் உள்ள சைதன்யம் தெய்வீகத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்தப் பானை உடைந்ததால் ஞானம் வந்துற்றதா? இல்லை, பானை உடைதல் ஞானத்துக்குக் காரணமா? பானைகளை உடைப்பவர்க்கெல்லாம் ஞானம் பிறக்குமா? இல்லை. ஏனெனில் பானை உடைதல் ஒரு காரணம் என்றால், அது ஒரு காரியத்தை அல்லவா

உண்டாக்கும்! எனவே இது ஞானத்துக்குக் காரணம் அல்ல. இந்த ஞானம் என்றும் பேரறிவின் எழுச்சி. எப்போதும் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. பானை உடையும் ஒலி அவளை வெளிநோக்கிய பார்வையில் இருந்து அவளை உள்முகமாகத் திருப்பிவிட்டது. ஏனெனில் அவள் தனது குருவின் அருள்நோக்கால் அதற்குத் தகுதி பெற்றவளாக இருந்தாள். எனவே பானை உடைந்த ஒலியில் அவள் உடல் உணர்ச்சியும் மறைந்துவிட்டது. அங்கு உடல் இல்லை. பானைகள் இல்லை. தன்முனைப்பு இல்லை. எல்லாமே ஒடுங்கிவிட்டன.

இங்ஙனம், பல்வேறு சூழ்நிலைகளில் ஞானம் பிறக்கிறது. வெகுசாதாரண சூழ்நிலையிலும் இது பிறக்கிறது. குருநானக் வாழ்விலுமே இப்படி ஒரு சாதாரண நிகழ்ச்சி ஆன்ம எழுச்சியை ஏற்படுத்தியது. அவர் பலசரக்குக் கடையில் எடைபோடும் ஆளாக வேலைபார்த்துக்கொண்டு இருந்தார். வாடிக்கையாளர் ஒருவருக்கு சில பொருட்களை எடைபோட்டுக் கொடுத்துக்கொண்டு இருந்தார். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று இந்தி மொழியில் எண்ணிக்கொண்டு இருந்தார். இந்தியில் பதின்மூன்று எண்ணைத் 'தேரா' என்று கூறுவார்கள். இந்தத் தேரா என்ற சொல்லுக்கு இருபொருட்கள் உண்டு. ஒன்று பதின்மூன்று என்பதாகும். மற்றொரு அர்த்தம் 'உன்னுடையது' என்பதாம்.

நானக் 'தேரா' என்று சொன்னவுடன் திடீர் என எடை போடுவதையும், கடையையும், எண்ணிக்கையையும், எண்ணுகின்ற தன்மையையும் மறந்துவிட்டார். 'தேரா' என்பது, தான் எடைபோட்டுக் கொண்டு இருந்த பதின்மூன்று என்ற எண்ணிக்கையைக் குறிக்கும் என்பதையும் மறந்துவிட்டார். 'தேரா' என்றால் 'உன்னுடையது' என்ற பொருள் மட்டுமே அவர்

இதயத்தில் தோன்றியது. இறைவனே! 'நான்' என்று ஒன்றுமே இல்லை. எல்லாமே நீதான். அனைத்தும் உன்னுடையதே என்ற ஞானம் எழுச்சி பெற்றது. அதுமுதல் நானக், நானக்காக இல்லை. அவர் இறைவனுடையதாக ஆனார்.

பாருங்கள்! இது ஒரு சாதாரணப் பலசரக்குக் கடையில் நிகழ்ந்தது. அதேபோல் ஞான எழுச்சி ஒரு சில வினாடிகளில் மதுரை சொக்கப்ப நாயக்கர் தெருவில் 'வேங்கடராமன்' என்ற சிறுவனுக்கு நிகழ்ந்தது. இந்த ஞான உதயம் எங்கு வேண்டுமானாலும் நிகழலாம். போதிமரம்தான் வேண்டும் என்பதல்ல. இந்த உலகில் உள்ள அனைத்துமே புனிதமானவையே.

'ஸர்வம் ப்ரம்ம மயம்'

இந்த மஹான்களுக்குள் அவர்கள் அறியாமலேயே, ஞானஒளி சுடர்விடத் தொடங்கி இருந்தது. பிறகு ஒருநாள் இது பளீரென வெளிப்படுகிறது. இந்த நிகழ்வே கடவுளின் அருட்பிரவாகம். பௌத்தத்தின் 'சடோரி' சித்தாந்தத்தின் 'ஸத்திநி'பாதம். நீங்கள் எதுவும் எதிர்பாராமலேயே இது நிகழும். இது இறைவனின் அருட்கொடை.

'"தேடாது உற்ற திருவருள் நிதியம்" என்று பகவான் இந்த அருள் வீழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

'இருந்தபடி இருங்கள்' - கந்தர் அலங்காரம் கூறும் வழிமுறையே ஞானநெறி. பகவான் தானே அறிந்து நமக்கும் காட்டும் வழியே இது. அன்பர் ஒருவர் பகவானிடம் கேட்டார்: "பகவானே! உங்கள் அருளை நாடி பலகாலம் காத்திருக்கிறேனே! அருள் எப்போது கிடைக்கும்? பகவான் விடையிறுத்தார்: "அருள் வெள்ளம் இடையறாமல் எப்போதும் பாய்ந்துகொண்டேதான் இருக்கிறது. நீர் குறுக்கே வராமல் இருந்தால் போதும்!"

ஆற்றின் போக்கிலே போங்கள். எந்தத் தடையும் நாமே ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. உங்களை ஆறு எங்கே அழைத்துச் செல்கிறதோ அங்கேயே செல்லவேண்டும். நாமோ ஆற்றில் போக்கில் போகாமல் எதிர்நீச்சல் அடிக்க விரும்புகிறோம். நாம் ஆற்றுடன் பிணங்கி எதிர் நீச்சல் அடிக்க முற்படுகையில் தன்முனைப்பு உருவாகிறது. இடைவிடாமல் எதிர்நீச்சல் போட்டால் ஒருநாள் நீங்கள் களைத்துப்போய், முழுகடிக்கப் படுவீர்கள்.

இறந்துபோன ஒருவனுக்கு உயிருடன் உள்ள, மனிதனுக்குத் தெரியாத ரகசியம் தெரிந்துள்ளது. இறந்த மனிதன் எதிர்நீச்சல் போடாமல் ஆறு எங்கே வேண்டுமானால் தன்னை எடுத்துச் செல்லட்டும் என்று விட்டு விடுகிறான். அவனுக்குத் தன்முனைப்பு முற்றிலும் இல்லை. இப்போது அவனுக்கு சுய சங்கல்பம் எதுவும் இல்லை. எந்த ஆறும் இறந்த ஒருவனை மூழ்கடிக்காது. அவன் ஆற்றின் ஓட்டத்திலேயே நகர்ந்து செல்கிறான். நாம் இருக்கும்போதே இறக்கத் தயாராக வேண்டும். அப்போது தன்முனைப்பு ஏதுமின்றி சம்சார வெள்ளத்தில் மூழ்காது, இறையருள் நம்மை இட்டுச் செல்லும். பகவான் இதைப் பிரத்யட்சமாக தமது மதுரை மரணானுபவமாகக் காட்டி உள்ளார்.

இதே அநுபவம், அயோத்தியில் வாழ்ந்த 12வயது சிறுவன் ஒருவனுக்கு ஏற்பட்டது. மிக இள வயதிலேயே ஞானநூல் கற்றுணர்ந்து மலர்ந்த நீலகண்ட் என்னும் அச்சிறுவன், “நான் இனி எதையும் செய்ய முயலமாட்டேன். அனைத்தையும் இறையருளே நடத்திக் கொள்ளட்டும் என விட்டுவிடுகிறேன்” என்று பூரண சரணாகதி செய்தான். அன்று இரவு 12 மணிக்கு தனது கை, கால்களைக் கட்டிக்கொண்டு சரயு நதியில் குதித்து விட்டான். “நான் ஆற்றின் பிரவாகத்தை

எதிர்த்து நீந்தப் போவதில்லை. இறையருள் போன்ற இந்த ஆற்றின் போக்கு எங்கு என்னை அழைத்துச் செல்கிறரோ அங்கேயே செல்கிறேன்” என்று திடமாக ஆற்றில் குதித்தான். கை, கால்களைச் சிறிதும் அசைக்காமல் ஆற்றின் போக்கிலேயே போவேன் என இருந்தான்.

மிக அதிசயமாக ஆறு கீழ்மட்டத்துக்கு அச்சிறுவனை அழைத்துச் செல்லாமல் உயர்மட்டத்துக்கு அழைத்துச் சென்றது. மறுநாள் உச்சிவேளையில் அச்சிறுவனை ஒருகரையில் கொண்டுசேர்த்தது. கங்கையின் கிளையாகிய சரயு நதி, அவனைக் கங்கையில் கொண்டு சேர்க்க, கங்கையோ அவனைக் கொண்டுபோய் ஹரித்துவாரத்தில் சேர்த்தது. சிறுவன் சேர்ந்த இடம் ‘மஹந்த்’ என்று அழைக்கப்படும் மதத்தலைவர் ஒருவரது ஆஸ்ரமத்தின் தோட்டம். தோட்டத்திற்குச் சென்ற சிறுவன் அங்கே ஒரு மரத்தடியில் அமர்ந்தான்.

தோட்டத்திற்கு வந்த மஹந்த், மரத்தடியில் ஒரு பிரகாசமான சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டார். “சிறுவனே! நீ யார்? எங்கு வந்துள்ளாய்?” எனக் கேட்டார். சிறுவன் “நான் அயோத்தியைச் சேர்ந்த நீலகண்ட். இறையருள் என்னை இங்கே கொணர்ந்து சேர்த்தது” என்றான். “உள்ளே வந்து உண்டு, கூடத்தில் தங்குவாய்” என்றார் மஹந்த். சிறுவனே “என்னை வழிநடத்தும் இறையருள் என்னை உள்ளே செல்லச் சொல்லவில்லை. எனவே இங்கேயே இருக்கிறேன்” என்றான். மஹந்த் சிறுவனை அங்கேயே விட்டுச் சென்றுவிட்டார்.

மாலை மங்கி இருள் கவியத் தொடங்கியது. மஹந்த் தோட்டத்திற்கு வந்து பார்த்தார். சிறுவனோ அதே நிலையில் கண்களை மூடித் தன்னுள்ளே ஆழ்ந்த சமாதிநிலையில் இருப்பதைக் கண்டார். சிறுவனைத் தட்டி எழுப்பி, “சிறுவனே! இதுவரை இங்கேயே

இருந்தாய். சரி! ஆனால் இரவு நேரங்களில் இங்கு மனிதரைக் கொல்லும் சிங்கம் ஒன்று உலவுகிறது. நீ வெளியே இருந்தாயானால் அது உன்னைக் கொன்றுவிடும். எனவே, இரவு ஆஸ்ரமத்தில் இருந்து பின்னர் காலையில் வெளியே செல்வாய்" என்றார்.

சிறுவன் கேட்டான்: "ஐயா மஹந்த் அவர்களே! நான் வெளியே இரவில் இருந்தால் எனக்கு சிங்கத்தின் மூலம் மரணம் வரும் என்று கூறுகிறீர்கள். நான் உள்ளே வந்து இருந்தால், வேறு எந்த வடிவிலாவது மரணம் வராது என்று உங்களால் உறுதியாகக் கூறமுடியுமா?" என்றான். பதில் அளிக்க முடியாமல் குழம்பிய மஹந்த், "சரி! உன் தலைஎழுத்து அப்படி எனில் நான் என்ன செய்ய முடியும்?" என்று கூறி உள்ளே சென்றுவிட்டார். சிறுவன் மீண்டும் மரத்தடியில் யோக சமாதியில் ஆழ்ந்தான்.

மறுநாள் காலை விடிந்தது. கதவினைத் திறந்து தோட்டத்திற்குள் வந்த மஹந்த், சிறுவனைச் சிங்கம் கொன்று தின்னபின் மீதி இருக்கும் எலும்புகளைக் காணலாம் என்று சோகத்துடன் வந்தார். ஆனால் அவர் அங்கே கண்ட அதிசயக் காட்சி என்ன? சிறுவன் அதே யோக சமாதியில் அமர்ந்திருக்க, சிங்கம் அவன் எதிரே மண்டியிட்டு அமர்ந்து, மிக்க பக்தியுடன் அச்சிறுவனையே நோக்கிக் கொண்டு இருந்தது. மஹந்தைக் கண்டவுடன் உடனே எழுந்து ஓடிவிட்டது.

அந்த அதிர்வில் சமாதியில் இருந்து விழித்த சிறுவனின் பாதங்களில் பணிந்த மஹந்த், "நீலகண்ட்! உன் சிறுவயதுத் தோற்றம் கண்டு உன் பெருமையை உணராது இருந்துவிட்டேன். நீயே என் சத்குரு என உணர்ந்தேன். என்னை ஏற்று அருள்வாய்" என்று மீண்டும் பணிந்தார். அவரை முதல் சீடனாய் ஏற்ற நீலகண்ட், பின் 'ஸ்வாமி நாராயண்' என்ற திருப்பெயர்

தாங்கி உலகெங்கிலும் பரவியுள்ள ஸ்வாமி நாராயண் ஸ்தாபனத்தை ஆத்மிக ஆலமரமாய் உருவெடுக்கச் செய்தார். இதுவே பகவான் கூறும் தன்முனைப்பு இல்லாது, இறைஅருள் நடாத்தும் வழியில் நம்மை அர்ப்பணித்துக் கொள்வதாகும்.

இருந்தபடியே இருந்து, சும்மா இருத்தல் என்பதை உழைப்பு இல்லாத சோம்பேறித்தனம் என்று பொருள் கொள்ளக்கூடாது. செயல்புரிபவன் நான் என்னும் அகங்காரத்தையும், இச்செயலின் பயன் என்னுடையது என்னும் மமகாரத்தையும் ஒழிக்கவேண்டும் என்பதே இதன் பொருள் என்கிறார் பகவான்.

*யான்தான் எனுஞ்சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவருக்கும்*

*தோன்றாது சத்தியம் (கந்தர் அலங்காரம், 95)*

அகங்காரம் (நான்), மமகாரம் (எனது) என்ற இரண்டும் அழிந்தாலன்றி யாவர்க்கும் ஆத்மசத்யம் தோன்றாது என்கிறார் அருணகிரியார். நான்-எனது என்ற ஆணவ உந்துதலுடன் செயலாற்றும்போது, அவ்வேலையின் மனஅழுத்தம் முழுதும் நம்மிடையே வந்து சேர்வதால், வேலையை நம்மால் திறம்படச் செய்ய முடிவதில்லை. இந்த 'நான்'-'எனது' என்பவை நீங்கினால், அனைத்தும் இறைவனுடையதே என்ற ஞானம் தழைக்கிறது. ஆணவத் தடைநீங்கும்போது ஈசனின் அருள்சக்தி நம்மில் புகுந்து, நமது வேலையைத் திறம்படச் செய்யச் செய்கிறது. செயலாற்றும் தேகமோ, மனமோ நான் அல்ல என்ற ஞானம் வரும்போது, அவன் வேலை செய்யும்போதும் பூரண ஓய்விலேயே உள்ளான்.

ஒரு அன்பர் பகவானிடம் "நாம் செய்யும் வேலைகள் தியானத்திற்குத் தடை ஆகாதா?" என்று கேட்டார்.

அதற்கு ஸ்ரீபகவான் “எந்த வேலையும் உன்னுடையதல்ல என்ற எண்ணம் எப்போதும் உன் திருஷ்டியில் இருந்தால் அதுவே போதும். இதை ஞாபகப்படுத்திக் கொள்ள முதலில் பிரயத்தனம் தேவை. பிறகு இது இடைவிடாமலும் சஹஜமாயும் இருக்கும். வேலையும் நடந்துகொண்டு இருக்கும். உன் சாந்திக்கும் பங்கம் இருக்காது. தியானமே உன் இயற்கை நிலை. வேறு எண்ணங்கள் தடை செய்வதால் அதனை இப்போது தியானம் என்கிறாய். இவ்வெண்ணங்கள் ஒழிந்தபோது நீ தனித்து இருக்கிறாய். அதுவே சிந்தையற்ற சமாதி நிலை. இந்த உன்னத நிலையை இதர சிந்தனைகளை அப்புறப்படுத்தி மீண்டும் அடைய முயல்கிறாய். அவ்வாறு அப்புறப்படுத்துவதே இப்போது தியானம் எனப்படுவது. இப்பழக்கம் உறுதியானால் நமது உண்மை நிலையே உண்மைத் தியானமாக வெளியாகிறது.”

*மயி ஸர்வாணி கர்மாணி ஸந்யஸ்யாத்⁴யாத்ம சேதஸா*
*நிராஶீர் நிர்மமோ பூ⁴த்வா யுத்⁴யஸ்வ விக³தஜ்வர:*

*(பகவத் கீதை, 3-30)*

(எல்லாக் கர்மங்களையும் என்னிடம் சமர்ப்பணம் செய்து தான் ஆன்மா என்ற அறிவுடன் பலனில் இச்சை அற்று கர்மமும், அதன் பயனும் தனது என்னும் எண்ணம் நீங்கி, மனக்கொதிப்பு அற்றவனாய் போர்புரிக).

இதுவே கர்மயோகத்தின் தாத்பர்யம். இதுவே பகவான் காட்டும் செயல்பாட்டுக்குரிய வழி.

இதுபோன்றே ஆத்மசாதனை செய்வதற்காக குடும்பத்தையும் வேலையையும் விட்டுவிட்டு தனிமையில் சன்னியாசம் மேற்கொள்ள வேண்டுமா என்று அடிக்கடி அன்பர் கேட்கும் கேள்விக்கும் பகவான் இதேரீதியில் பதில் அளிக்கிறார். துறவு

என்பது மனம் சார்ந்தது. அது வெளிச் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதில்லை. ஒருவன் குடும்பஸ்தனாக இருந்த பலவேளைகளில் ஈடுபட்டு இருந்தாலும், மனதில் பற்று இல்லாதவனாக இருக்கலாம். இன்னொருவன் அனைத்தையும் விட்டுக் காட்டில் வாழ்ந்துகொண்டு இருந்தாலும், மனத்து அளவில் அனைத்தின்மீதே பற்று உடையவனாக இருக்கலாம். நீ காட்டிற்குச் சென்றாலும், குடும்பம், வேலை முதலியவற்றை விட்டுச் சென்றாலும், உன் மனம் கூடவே வருகின்றதல்லவா? 'நான் கிரஹஸ்தன்' என்ற பேருக்குப் பதிலாக 'நான் துறவி' என்று பேரை மாற்றிக் கொள்வாய். அவ்வளவுதான்! மனத்தளவில் துறவுபூண்டு 'நான் கிரஹஸ்தன்', 'நான் சன்னியாசி' என்ற எல்லா எண்ணங்களையும் விட்டுவிட்டு, 'நான் இருக்கிறேன்' என்ற ஸத் உணர்வு மாத்திரமாக இருப்பது ஒன்றே தேவை என்று வழிகாட்டினார்.

நாம் இவ்வுரையாடல் தலைப்பில் கண்டபடி, பகவான் அபின்னமாய், பிரிவுறா முழுமையாய், அலகில் சோதியாய் திகழ்ந்து, அபேதமற்று அருளுபவர். நாம் காணும் யாவற்றிலும் ஆன்மாவை அன்றி வேறு எதையுமே காண்பதில்லை என்று பகவான் அடிக்கடி கூறுவார். ஒருசமயம் பகவான், பக்தர் ஒருவர் தன்னை இந்தியாவின் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லத் திட்டமிட்டு இருந்ததாகவும், அந்த ஏற்பாட்டைத் தான் ஏற்கவில்லை என்றும் பகவான் கூறினார். "நான் எங்கு போவதினால் என்ன பயன்? என்னால் எதையும் பார்க்க முடியாது. நான் எங்குச் சென்றாலும், எனக்கு எதைக் காண்பித்தாலும் நான் ஆன்மா ஒன்றையே காண்கிறேன். வேறு எதையும் பார்க்க முடியாது" என்றார். ஒருசமயம், அன்பர் ஒருவர் வீட்டிலிருந்து பலவிதமான பண்டங்களைச் சமைத்து எடுத்துவந்து பரிமாறினார். பகவான் வழக்கம்போல, ஒவ்வொன்றிலும் சிறிது எடுத்து, எல்லாவற்றையும்

ஒன்றாகக் கலந்து சாப்பிட்டார். அன்பரிடம் "இனிமேல் இவ்வளவு சிரமப்பட்டு பலவித உணவு வகைகளைத் தயாரித்துக் கொண்டு வரவேண்டாம் என்று அந்த அம்மாவிடம் கூறுங்கள். உங்கள் எல்லோருக்கும் பலவித ருசிகள் உள்ளன. ஆனால் எனக்கோ ஒரே ருசிதான். உங்களுக்குப் 'பல'வற்றில் ருசி. எனக்கு எப்போதும் 'ஒன்றி'ல் தான் ருசி. எனவே அனைத்தும் எனக்கு



ஒன்றே" என்று அபின்னமான அத்வைத உணர்வில் தான் சதா ஸஹஜ நிலையில் இருப்பதை பகவான் வெளிப்படுத்தினார்.

"மோனமாய் நான் என்னும்
மூர்த்தியாய் மூன்றும் இல்லாத்
தானமே தானே தானாம்
ஸஹஜ சமாதி நின்று
வானமே போலச் சாட்சி
வகித்தவன் ரமண வள்ளல்
ஞானவான் அநந்தனான
பகவானைப் பாடுவோமே"

என்ற சுத்தாநந்த பாரதியின் பாடலை நினைவில் இருத்தி, உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# தணல் மலையின் தண் சுனை

**ரா. கணபதி**

**(தொடர்ச்சி)**

*குரங்கோ, அணிலோ, எந்த ஜீவராசியானாலும், "அது" என்று பகவான் சொன்னதேயில்லை. "அவன்", "அவள்", "பசங்கள்" என்றுதான் சொல்வார்.*

*இவன்கள் (குரங்குகள்) இன்னின்ன "க்ரூப்"புக்கு இது இதுதான் எல்லை என்று வைத்துக் கொண்டிருக்கான்கள். அதைத் தாண்டினால் அடுத்த எல்லைக்காரன்கள் யுத்தம் செய்வான்கள். அதனால் மலைக் குரங்குகள் இங்கே வர முடியாதே!" என்று விசனப்பட்டார்.*

*அங்கே அந்தக் குரங்குகளுக்கும் பகவான் தரிசனமின்றித் தாள முடியாமல் தங்கள் எல்லைக் கோட்டையும் தாண்டிக் குஞ்சு குளுவானிலிருந்து குடுகுடு தாத்தா வரையில் அத்தனையும் வந்துவிட்டன. பகவான் எதிர்கொண்டு சென்று அவை ஒவ்வொன்றையும் குசலப் ப்ரச்னம் செய்தார். அவை அவரைச் சுற்றிச் சுற்றி வந்தன. பகவான் உக்ராணத்திலிருந்து உணவுப் பண்டங்களைக் கொண்டு வந்து அவற்றுக்குப் படைக்கச் செய்தார். பிரிய மனமின்றி அவை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு சென்றன.*

*பகவான் கண்களில் முட்டும் நீரோடு, அருகேயிருப்பவர்களின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத மனவெழுச்சியுடன் திரும்பினார். இந்த விவரங்களை அவருக்கு அணுக்கத் தொண்டு புரிந்த பூஜ்யஸ்ரீ குஞ்சு ஸ்வாமிகள் சொல்லக் கேட்டால் உருகாத நெஞ்சம் இராது.*

ஞானிகளின் முடி மாணிக்யமான அவர், பக்த திலகமாக திவ்ய ஸ்மரணத்தில் கண்ணீர் வடித்தது மட்டுமல்ல ஸகல உயிரினங்களையும் தன்னுயிரெனக் கண்டு, அவற்றுக்காகவும் கண்ணீர் சொரிந்திருக்கிறார்.

முதலில் பகவானை வேறாக நினைக்கும் பக்தி, பின்னர் அவனே ஆகிவிடும் ஞானம், அதற்கு அப்புறம் அவனே எல்லாமும் என்ற உணர்வோடேயே செய்யும் "ஞானோத்தர பக்தி" என்று மஹர்ஷி பாகுபாடு செய்தார். தாமோ பரம்பொருளிடம் இந்த ஞானோத்தர பக்தியைக் காட்டியபோதே ஜீவகுலம் அனைத்திடமும் "ஞானோத்தர கருணை"யையும் பொழித்தார்.

"ஞானியின் கண்ணில் இப்படி ஜலம் வரலாமா?" என்று ஒருவர் ரமணரையே கேட்டார்.

"வரலாமாவா? கண்ணீரும் கம்பலையுமாக இருப்பதுதான் அவனுடைய ஸ்வபாவமே! அதை அடக்கிக் கொண்டு, அடைத்துக் கொண்டு வேறு விதமாகக் காட்டிக் கொள்கிறான்" என்று பளிச்சென்று பதில் கூறினார் பகவான்.

பவ்வ வெண்திரை கொழித்த தண்தரளம்
விழி உதிர்ப்பமொழி குளறியே
பாடி ஆடி உள்ளுடைந்து (உ)டைந்தெழுது
பாவைஒத்(து) அசைதல் இன்றியே
திவ்ய அன்பு உருவமாகி அன்பரொடும்
இன்ப வீட்டினில் இருப்பனோ

பாவை ஒத்து அசையா அசலமாயிருந்த அருணாசல ஞானி தண்தரளம் வழி உதிர்க்கும் அருள்வாவியுமாக இருந்தார்.

ஓர் எல்லைக் குரங்கு இன்னோர் எல்லைக்கு வந்தால் இந்த எல்லைக் குரங்குகள் அதை சேர்த்துக் கொள்ளாதது மட்டுமில்லை; அது திரும்பத் தன் எல்லை சென்றால் அதன் சொந்தக் கோஷ்டியும் அதைப்

பகிஷ்காரம் செய்துவிடும். ஆனால் மஹர்ஷிகளின் எல்லையில்லா அன்பின் ப்ரபாவத்தைப் பாருங்கள். ஆச்ரமத்துக்கு எப்போதேனும் ஒரு மலைக் குரங்கு வந்தால் அதை அடிவாரக் கோஷ்டி எதிர்த்ததுமில்லை; பிறகு அது தன் கோஷ்டிக்குப் போனபோது அவை இதை விலக்கியதுமில்லை!

குட்டி போட்டவுடன் தாய்க் குரங்குகள் பகவானிடம் தான் கொண்டு வந்து காட்டும். பகவான் பக்ஷமுடம் பக்ஷணம் பழம் கொடுப்பார். பக்தர்களைப் பார்த்து, "நீங்கள் எல்லாம் அகத்தில் குழந்தை பிறந்தால் என்னிடம் தெரிவிக்கிற மாதிரி, கொண்டு வந்து காட்டுகிற மாதிரி அவளும் செய்கிறாள்" என்று மலர்ந்து சொல்வார்.

ஸேது பந்தத்தில் ஓர் அணில் ஸ்ரீராமனுக்கு ஸேவை செய்தது. இங்கு அணில்களுக்கும் நம் பகவானின் ஸ்நேக பந்தம் கிடைத்தது. அவருடைய ஆதனத்துக்கு மேலேயே அவை கூடு கட்டிக்கொண்டு அவர் மேலேயே 'தொப்' 'தொப்' என்று விழுந்து விளையாடிக் கொண்டிருக்கும். கூட்டைக் கலைக்காமல், அவரோ அவற்றுக்கு முந்திரிப் பருப்பு ஊட்டுவார்.

ஒருமுறை முந்திரிப் பருப்பு தீர்ந்ததும் ஆசிரமத்தில் வேர்க்கடலையோ வேறேதோ ஸாதாரணப் பருப்போ வைத்து விட்டார்கள். ஓர் அணிலார் அதை வாங்கிக்கொள்ள முடியாது என்று பகவானிடம் சண்டித்தனம் பண்ணினார்! பகவான் எத்தனை தாஜா செய்தும் அந்த ராஜா மசியாததால், உக்கிராணத்துக்கு ஆள் அனுப்பி முந்திரி வாங்கி வரச் சொன்னார். அடுத்து வரும் பிக்ஷையில் பாயஸத்துக்கு வேண்டிய அளவே முந்திரி இருப்பதாகச் சொல்லிச் சமையற்கட்டுக்காரர்கள் பத்தே பத்து முந்திரிதான் கொடுத்தனுப்பினர்.

"ஓஹோ!" என்று ஆற்றிப் பறந்துவிட்டார் பகவான். "பாயஸமாம், அதற்கு வேணுமாம்! இங்கே

ஆச்ரமத்துக்கு வருகிறவர்கள் பாயஸம் வேணும், அப்புறம் அதில் முந்திரி மிதக்கணும் என்றுதான் அழுகிறார்களோ! இந்தக் குழந்தைகள் "வேணும்" என்று ஒன்றை ஆசையாகக் கேட்டுத் தவிக்கிறபோது கொடுக்காமல் இப்படி பிக்ஷா கைங்கரியம் பண்ணி விட்டால் மஹா புண்யந்தான்!"

அப்புறம் கேட்பானேன், உக்கிராணத்து முந்திரி இருப்பு அவ்வளவும் அணில்களுக்கென வந்துவிட்டன.

அது மட்டுமில்லை. அன்று மாலையே சென்னையிலிருந்து வந்த டாக்டர் அனந்த நாராயண ராவ் இரண்டு வீசை முந்திரிப் பருப்பை மஹர்ஷிக்கு ஸமர்ப்பித்தார், "என்னவோ தோன்றிற்று; இங்கே உள்ள அணில்களுக்கு வாங்கி வந்தேன்" என்றார்!

பகவானின் தேஜோமுக மண்டலத்தில் பிரேம ஜோதி மேலும் ஒளி வீச, அவர் மந்தஹாசத்துடன் கிங்கரர் கிருஷ்ண ஸ்வாமியைப் பார்த்து, "பார்த்தியா! அவன்களே தங்களுக்கு வேண்டியதைச் சம்பாதித்துக் கொண்டு விட்டான்கள்! இனிமேலே உன்கிட்டே யாசகம் பண்ண வேண்டியதில்லை. இந்த முந்திரி முழுக்க அவன்கள் சொத்தாக்கும். பத்திரப்படுத்தி வைத்துக்கொள்! பாரு! ஒரு பருப்புக் கூட உக்கிராணத்துக்குப் போகப்படாது! ஜாக்கிரதை!" என்றார். இப்படியே ஒரு சமயம் குரங்குகளுக்குத் தேன்குழல் கிடையாதென்றால் தமக்கும் வேண்டாமென்று "ஸத்யாக்ரஹம்" செய்து அதிலிருந்து முதல் பங்கே வானரங்களுக்குத்தான் அப்புறம் மஹர்ஷிக்கும் மற்றவர்க்கும் என்று விதி ஏற்படச் செய்தார். அப்போது, "இது ரேஷன் காலம்" என்று எவரோ சொல்ல, "குரங்குகளுக்கும் ரேஷன் கார்ட் வாங்கினால் போச்சு" என்று ஹாஸ்யமாக நவின்றாராம்!

எச்சம்மாளின் மறுபிறவி என்றே மதிக்கப்பட்ட பசுலக்ஷ்மி (லக்ஷ்மியம்மாள் என்பதன் மருவு தானே எச்சம்மாள்) பகவானின் புத்ரியாகவே மதிக்கப்பட்டவள்.

ஓர் அதிசயம். அவள் அநேகமாகத் தன் புத்திரர்களை பகவானின் ஜயந்தி நாளன்றேதான் ஈனுவாள். அவளால் ஏற்பட்ட கோ சாலையில், குரங்குக்கும் அணிலுக்கும் ராமனாக இருந்தவர், கோபலக் கண்ணனாகவும் ஆனார்.

நாகரிகப் பண்பு மிக்க லக்ஷ்மி ஒரு நாள் சாணியுமும் சகதியுமாக மஹர்ஷியின் அறைக்கே வந்துவிட்டது. வாயில்லா ஜீவன்களின் இதய மொழிதான் ஐயனுக்குத் தெரியுமே! அதை ஆற்றித் தேற்றினார். லக்ஷ்மிக்கு அன்று மூக்கணாங் கயிறு போட முயன்றிருக்கிறார்கள். அதிலே அதன் மென்மையான நாசியில் ரத்தம் வந்துவிட்டது. பகவானிடம் முறையிடவே தன் பண்பையும் மறந்து ஓடி வந்திருக்கிறது. அதற்கு வாழைப் பழங்களும், அது போதாதென்று இட்டிலிகளும் கொடுத்து ஆச்வாஸப்படுத்தித் திருப்பி அனுப்பினார் அருளாளர்.

“இன்றைக்கென்ன லக்ஷ்மி இத்தனை ஆபாஸமான நிலையில் வந்தது ?” என்று ஒருவர் வினவினார்.

உடனே பகவான் “நமக்கு ஒரு துக்கம் ஏற்பட்டால் குளித்து தலைவாரி, புது டிரஸ் போட்டுக்கொண்டா பகவானிடம் முறையிடுகிறோம் ?” என்று கேட்டார்.

பகவானின் அந்திம தசையில் அவரை விஸ்தாரமான கருங்கல் கட்டிடத்துக்கு மாற்றினார்கள். எளிய இருக்கைக்கே பழகிய ஐயனுக்கு அது ஏற்பாக இல்லை. ஆயினும் ஆசிரமவாசிகளின் எந்த விருப்பத்தையும் நம்பவொண்ணாத பணிவோடு கட்டளையாகவே ஏற்றவராதலால் இதற்கும் இசைந்தார்.

புது மண்டபத்துக்கு வந்து வழவழாக் கல் ஸோஃபாவில் அமர்ந்த பகவானின் கண்களிலிருந்து



மாலை மாலையாகத் தாரை பெருக்கிட்டது. தொண்டை அடைக்க, "குரங்கும், அணிலும், மயிலும் இங்கே எப்படி வரமுடியும்? அது மட்டுமில்லை; ஏழை எளிய ஜனங்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கும் பழைய இடம் அவர்கள் வீடு மாதிரியே சாமானியமாக இருந்தது. "நம்ப ஸ்வாமி" என்று ஸகஜமாக உள்ளே வந்தார்கள். இப்போது இத்தனாம் உயரக் கருங்கல் மண்டபத்தையும், இந்தத் தோரண வாசலையும் பிரம்மாண்டக் கதவையும் பார்த்தாலே, பாவம், நம் ஏழை ஜனங்கள், 'ஐயோ, நாம் அங்கே கால் வைக்கவா?' என்று கூசுவார்களே!' என்றார். மேற்கொண்டு பேசமுடியவில்லை.

தேரடியில் நின்று ரசித்தாலும் போதும் என்று நந்தன் நொந்ததே இது வரை நாம் அறிவோம். இப்போதுதான் இப்படித் தேரடியிலே நிறுத்தித் தரிசனம் தருகிறோமே என்பதில் நடராஜனும் எத்தனை நோவு கண்டாரென்று தெரிகிறது.

கார்த்திகை விழாவின் போது இரவு இரண்டு மணியிலிருந்தே ஆயிரம் மக்கள் கிரிப் பிரதக்ஷிணம் தொடங்குவர். அதில் பெரும்பாலோர் பரிக்ரம மார்க்கத்திலேயே அமைந்துள்ள ஆச்ரமத்துக்கும் வந்து ரமணரை வணங்கிச் செல்வர். இவர்களில் பலர் சிக்கும் சிடுக்கும் துர்வாடையும் பிடித்தவர்களாக இருக்கிறார்கள். போதாக் குறைக்கு இது விடாத மழைப்பருவமாகவும் இருப்பதால் பகவானின் கட்டில் வரை அவர்கள் அழுக்கும் சேறுமாகச் செய்து விடுகிறார்கள். நள்ளிரவிலிருந்து பகவான் நித்திரை இல்லாமல் தரிசனம் கொடுப்பதைத் திரிமூர்த்திகள் வந்தாலும் தடுக்க முடியாது. ஆனாலும் இந்தப் பாமரக் கூட்டம் அவருக்கு மிகவும் அருகில் போய்த் தொந்தரவு தராமலாவது செய்ய வேண்டும் என ஒரு கார்த்திகை சமயத்தில் ஆசிரம நிர்வாகிகள் யோசித்தனர். முடிவாக முதல் நாள் இரவு பகவான் அறையில் அவரது கட்டிலுக்குப் பல அடிகள் தள்ளி மரத்தால் கிராதிகள் அமைந்து அதற்கு மறுபுறம் இருந்தே கூட்டம் அவரைக் கண்டு செல்லுமாறு ஏற்பாடு செய்தனர்.

ஆனால் மறுநாள் காலை நிர்வாகிகள் அங்கு வந்தபோது கண்டதென்ன?

பகவான் தமது கட்டிலை அந்தக் கிராதிகளை ஒட்டினாற் போலவே இழுத்துப் போட்டுக் கொண்டு, பாமரப் பேதைகளையும் தம்மிடம் "இழுத்துப் போட்டுக்கொண்டு" அவர்களுடைய சளசளப்பு முறையீடுகளைச் சாந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்! நள்ளிரவிலிருந்தே இப்படி நடக்கிறது எனத் தெரிந்தது.

ஆசிரமத்தார் போட்ட கிராதியை அவர் எடுக்கச் சொல்லவில்லை. அவர்தான் அதன் உத்தரவுகளுக்கெல்லாம் கட்டுப்பட்டவராயிற்றே! அதனால் தம் கட்டிலையே அதன் ஓரத்துக்கு இழுத்துக் கொண்டிருக்கிறார்.

“பகவான் இப்படிச் செய்யலாமா? தங்களுடைய வயோதிகத்திலும், உடல் நலிவிலும் ஜனங்களின் சத்தமும் ஹிம்ஸையும் வேண்டாம் என்று நினைத்துத்தானே தடுப்புப் போட்டேன்?” என்று ஒருவர் வினவினார்.

“ஹிம்ஸை என்றா சொல்கிறீர்? நான் அப்படி நினைக்கவில்லை ஓய்! உம்ம ஏற்பாட்டை மீற வேண்டும் என்றும் எனக்கில்லை. கிரிப் பிரதக்ஷிணம் செய்யும் அந்தப் புண்யாத்மாக்களின் ஸாமீப்யம் (அண்மை) எனக்குக் கிடைக்கும் என்றுதான் இப்படிப் பண்ணினேன்” என்றார். ஸாமீப்யம், ஸாரூப்யம் யாவற்றுக்கும் மேலான ஸாயுஜ்யத்தில், புண்யம்-பாவம் யாவும் கடந்த ஏகஆத்மனாக விளங்கிய அண்ணாமலை அண்ணல்.

அருணாசலத்தை அக்னி மலை என்பார்கள். பார்த்தாலும் அப்படித்தான் தோன்றும். ஆனால் விந்தை, ஊருக்குள் வருகையில் அதன் வலது பாகத்தில் - மனித சரீரத்தில் பௌதிக இதயத்துக்கு நேர்எதிரே வலப்பக்கம் எங்கு ஆத்மிக இதயம் உள்ளது என்று ரமணர் சொல்வாரோ அதே இடத்தில் - பசுமையின் ஜீவ சாரம் கொஞ்சும் ஒரு திட்டைக் காண்போம். அதுதான் நம் பகவான் தற்போதைய ரமணாச்ரமத்தில் குடிகொள்ளும் முன் வதிந்த ஸ்கந்தாச்ரமம். அங்கே அவரது ஸ்வர்ண ஹஸ்தம் விலக்கிய ஒரு பாறைக்கடியிலிருந்து வற்றாத சுனை பெருகுகிறது. ஞானாக்னி மயமான மஹர்ஷிகளின் ஆத்மீக இதயத்திலும் அன்பு ஊற்றின் அசிசயப்பசுமை உண்டு. பச்சை மீனாக்ஷியம்மாவிடமிருந்தே அருணாசல அப்பனிடம் வந்தவரல்லவா அவர்? அந்தப் பச்சைக்கு இன்று நூறாண்டு. (1979).

ஆயிரம் யுகமானாலும் வாடாத பசுமையே! உனக்குக் கோடி நமஸ்காரம்.

# ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே

**சு. பரமேஸ்வரன், கோவை**

## எண் எழுத்து இகழேல்

மொழிக்கு அடிப்படை ஒலி. ஒலியின் வரி வடிவம் எழுத்து. ஒவ்வொரு ஒலிக்கும் வெவ்வேறு மொழிகளில் உள்ள எழுத்துக்கள் (வரி வடிவம்) வேறுபடும். அரிச்சுவடியை அடிப்படையாகக் கொண்டதே தமிழ்மொழி. இதில் உயிர் எழுத்து 12, மெய் எழுத்து 18 இதனை 'உயிரும் உடலும் முப்பதுமாமே' என்ற நன்னூல் வரிகளால் அறியப்படுகிறது. உயிர் என்பது இயக்கம், அதாவது சுவாசம்; உடல் என்பது அசைவற்ற பொருள், ஜடம். உயிர் எழுத்து பிராணனின் இயக்கத்தைக் குறிக்கிறது. பிராணனின் இயக்கத்தில் உள்செல்லுதல் பூரகம். இதில் நெடில் 6 எழுத்துக்கள்; வெளிச்செல்லும் காற்று ரேசகம். ரேசகத்தில் குறில் 6 எழுத்துக்களும் பொருந்தும். ஆயுத எழுத்து ஃ என்பது பிராண இயக்கத்தில் கும்பகம் உள் அடக்கும் செயலாகும். அஃது ஆதியிலும் பொருந்தும் அந்தத்திலும் பொருந்தம். ஜீவனை வாழ வைக்கும் ஆயுதம். இதுவே முடிவில், சாவு நிலையைக் குறிக்கும் பலி பீடம். கடவுளை அறியும் கலை தமிழ் மொழி.

தனிமையில் அமர்ந்து குறில்-நெடில் எழுத்துக்களை மனதிற்குள் சொல்லிப் பார்த்தால் சுவாச கதி உள்ளும்-புறமும் செல்வதை யாரும் உணரலாம். மெய் எழுத்து 18 ஆகும், இது மெய்யிலே (உடலில்) பொருத்தப்படுகின்ற எழுத்து ஆனதால் மெய் எழுத்து எனப்பெற்றது. இதுவும் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று பிரிவுகளாக உள்ளது.

புள்ளியின் விளைவே பூரணம், கடவுளுக்கு உரியதும், கடவுளைக் குறிப்பிட்டுக் காட்டும் எழுத்துக்கள் அடங்கியதே உயிர் எழுத்து, மெய் எழுத்து, ஆயுத எழுத்து ஆகும். இவையெல்லாம் உண்மைதானா? என்போர், அவ்வையாரின் விநாயகர் அகவலில் உள்ள,

ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால் (ஓம்)
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி....
இடை பிங்கலையின் எழுத்து அறிவித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி...

என்ற பாடலைப் படித்துத் தெளிக.

'ஓம்' - என்பது நமது சமயத்தை உலகுக்கு எல்லாம் அறிமுகப்படுத்தும் ஒரு புனித சின்னமாகும். ஓங்காரம் என்பது அடிப்படை ஒலி, பிரபஞ்சத் தோற்றத்திற்கு இதுவே காரணம். அனைத்துப் படைப்புகளுக்கும் தலைவன் சிவன். இவரிடம் ஆக்கல், காத்தல், அழித்தல் என மூன்று செயல்கள் உண்டு. ஓங்காரத்தின் விரிவான வரி வடிவம் அ, உ, ம என்பது. ஓம் என்ற ஆதாரத்வனி சூரியனின் வளி மண்டலத்தின் வெளிப்புறத்தில் இருந்து வருகிறது எனக்கண்ட இன்றைய அறிவியலில் உண்மையை; பிண்டத்தில் மனித தேகத்தில் உணர்ந்ததே தமிழரின் பண்டைய மெய்யியல். முன்னது உலகியல் அறிவு, பின்னது மெய்யியல் அறிவு. பொருள் அற்ற வெற்றோசை ஓசையெனவும், பொருளோடு கூடிய ஓசையை ஒலி எனவும் வகைப்படுத்தியுள்ளனர். இதன் ஓசையை எழுத்தில் வடிக்க இயலாது.

'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி'

என்பார் அப்பரடிகள்.

இறை நிலை அருவமாகவும் உருவமாகவும் திகழ்கிறது. ஆகாசம் - வெட்ட வெளிக்கு உருவம் கிடையாது. இந்த வெட்ட வெளியிலிருந்து நாதம்-

ஒலி உண்டாயிற்று, இதிலிருந்து பஞ்ச பூதங்களும், உயிரினங்களும் தோன்றியது. இதை திருமூலர்,

'ஓம் காரத்துள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓம் காரத்துள்ளே உதித்த சராசரம்'.. ...

என்பார்.

பஞ்ச பூதங்களை லம்-வம்-ரம்-யம்-கம் என்ற பீஜ மந்திரங்களால் குறிப்பிடுவர்.

'ஏகாட்ஷரமே மோனாட்ஷரமுமாம்
மோனாட்ஷரமே நாதபிந்துவுமாம்
எழுதாதட்ஷரமே உயிர் மெய் எழுத்தாம்
பழுதறப் பார்க்கில் உயிருடல் ஒன்றாம்'

அகர - உகர - மகரம் சேர்ந்ததே ஓம் எனும் பிரணவம். இது மனித தேகத்தில் நாத - விந்துக்களாக உள்ளது. இதுவே சக்தி - சிவம் எனப்படும் இறைநிலை. சூட்சுமத்தில் ஒலி ஒளியாகவே உள்ளது. தமிழ் ஏட்டுச் சுவடிகளில் பிள்ளையார் சுழி ஒவ்வொரு ஏட்டிலும் இருப்பதைக் காணலாம். விபரம் அறிந்த பலரும் பிள்ளையார் சுழியை எழுதிவிட்டுத் தான் எதையும் எழுதத் துவங்குவார்கள். புள்ளியைச் சுழித்தால் புள்ளிச் சுழி இது பஞ்ச பூதங்கள் ஐம்புலன்களை அடக்கி ஆளும் அறிவேயாகும். ஐங்கரனின் செயல் பிள்ளையார் சுழியாயிற்று விந்துவும் - நாதமும் சேர்ந்த தத்துவமே பிள்ளையார் சுழி. இதுவே உயிரெழுத்து, ஏகாட்சரம், மோன எழுத்து, விந்து என்பது சக்தி; நாதம் என்பது சிவம். விந்துவின் வடிவம் புள்ளி, நாதத்தின் வடிவம் தண்டம்-கோடு. அருணகிரிப் பெருமானும் திருப்புகழில்,

'நாத விந்து கலாதீ நமோ நம
வேத மந்திர சொரூபா நமோ நம'

என்பார்.

தமிழின் ஓசை இனிமைகளைக் கேட்டு, உணர்ந்து, அனுபவிக்கச் சிறந்தவை திருப்புகழ், திருவாசகம், அருட்பா, தேவாரப் பாடல்களாகும். இதில் பல பாடல்களில் எண்களைக் கொண்டு ஒன்று இரண்டு, மூன்று எனத் தொடங்கி எண்ணில் அலங்காரப் பாடல்களாக அமைக்கப் பெற்றுள்ளது. உதாரணமாக திருஞான சம்பந்தர், திருமங்கை மன்னன் பாடியுள்ள எழுகூற்றிருக்கைப் பாடல்கள். எண்களை உபயோகிப்பது கணிதம். இறைவன் மீது பாடல்களை இயற்றும்போது எண்களைப் பற்றி நினைப்பானேன்?

தமிழ் அரிச்சுவடி கூறுகிறது, 'எண் எழுத்து இகழேல்' என்று. பொய்யா மொழி வள்ளுவரோ,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.'

என்பார்.

இன்றைய விஞ்ஞான உலகில் கணிப்பொறியின் உபயோகம் இல்லாத துறையே கிடையாது. விவசாயம், மருத்துவம், பொறியியல், வியாபாரம் என எல்லாத் துறைகளிலும் இதன் தேவை நாளும் அதிகரித்து வருகிறது. ஒரு சாதாரண கணிப்பொறி முதல் பல கோடி திறன் கொண்ட சூப்பர் கம்யூட்டர் வரை அதன் இயக்கு சக்தியாக உள்ளது இரண்டு எண்களே. மென் பொருளில் உள்ள 0 - 1 என்ற இரண்டு எண்களே எல்லா கணிப்பொறிகளையும் இயக்குகிறது என்பது விந்தையான செய்தி. அண்டத்தில் உள்ள நுட்பங்களை பிண்டத்தில் கண்ட நமது முன்னோர்கள் ஒரு எழுத்திலும், இரண்டு தமிழ் எண்களிலும் ஞான ரகசியங்களை மறைத்து வைத்தனர். இவற்றின் ஞான நுட்பங்களை, செயல்முறையை அறிய ஒரு ஞான குருவின்றி யாராலும் விளக்க இயலாது, எனவே தான் எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்ற பழமொழி தோன்றியது.

உயிர் எழுத்தான 'அ' என்பது எண்ணில் 8 ஆகவும், 'உ' என்பது எண்ணில் 2 யும் குறிக்கும்.

'ஆரும் அறியார் அ காரம் அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி' (திருமந்திரம்)

'அ' காரம் என்பது இறைவன் என்று யாரும் அறியமாட்டார்களாம், ஏன்? அது 'எழுதாத புத்தகத்தின் எழுத்து' பாடலைப் பாருங்கள்:

'எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளை
தெருளாத கன்னி தெளிந்திருந்து ஓத'... (திருமந்திரம்)

எழுதாத புத்தகம் என்று உலகில் உண்டா? என்றால் உண்டு என்பார் தமிழ் இலக்கணம் வகுத்த தொல்காப்பியனார்,

'அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதுஇவண் நுவலாது, எழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே'
(தொல்காப்பியம்)

மானுட சரீரத்தில் மூலாதாரத்தில் நின்று இலங்கும் மூல ஒலி அதிர்வுகள் தவநிலையில் உணரக் கூடியவையால், அது மனம் வாக்கிற்கு அப்பாலாய் இருப்பதால் இதற்கு வரிவடிவம் - மொழி இல்லை. இதை யோகிகள், ஞானிகளால் மறைக்கப்பட்ட, மறைமொழி அதாவது எழுதாத புத்தகத்தின் எழுத்து. இதுவே மந்திரம் எனப்படுகிறது. இதற்கு நான் இலக்கணம் படைக்கவில்லை. புறத்தில் எழுந்த ஒலி வைகரி எழுத்துக்கான இலக்கணம் செய்வித்தேன் என்கிறார். மேலும்,

'நிறைமொழிமாந்தர், ஆணையின் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்'

என்பார் தொல்காப்பியனார்.

'மறைமொழி' என்று ஏன் கூறவேண்டும்? 'ஓம்' என்று யாரும் உச்சரிக்கலாம், ஆனால் அதன் உள்ளே இருக்கின்ற ஆற்றலை நாம் புரிந்து கொள்வதேயில்லை. மறைமொழியை புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெற முயற்சிக்க வேண்டும். எழுதப்படாத புத்தகத்தில் 'அ' காரமா இறைவன் இருக்கிறான் என்பதே பொருள்.

'அகரமுதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகரமுதலாய் உயிர்ப் பெய்துநிற்கும்' (திருமந்திரம்)

சிவ வாக்கியரும்,

'அவ்வெனும் எழுத்தினால் அகண்டம்ஏழும் ஆகினாய்
உவ்வெனும் எழுத்தினால் உருத்தரித்து நின்றனை
மவ்வெனும் எழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வும்உவ்வு மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே'

என்று கூறியுள்ளதையும் ஒப்பு நோக்கித் தெளிக.

அ என்பது எண்ணில் எட்டையும் குறிக்கும், இறைவனின் குணத்தையும் குறிக்கும். திருநாவுக்கரசரும், 'எட்டுவான் குணத்தீசன் எம்மான்' என்பார். 'இறைவனை மறையவனை எண்குணத்தினானை' என சுந்தரரும் பாடினார்.

உ என்பது எண்ணில் இரண்டையும் குறிக்கும் இறைவனின் இருதன்மைகளான உருவம் அருபத்தையும் குறிக்கும்.

'உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீங்கலும், நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையவர்'

எனக் கம்பரும்,

'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என சேக்கிழார் பெருமானும் பாடியருளினார்கள்.

ஆக 18 சித்தர்களும், சைவ சித்தாந்திகளும் அருணகிரியார், திருமூலர், வள்ளலார், தாயுமானவர்,

பட்டினத்தார் என எல்லா ஞானிகளும் எட்டு, இரண்டு என்ற சொற்றொடர்களைக் கையாண்டுள்ளனர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இறைத் தத்துவத்தை இயற்கையில் ஒலி, ஒளியாக இருப்பதை நாத, விந்து வடிவாகக் கண்டு களித்து வழிபட்டுக் கூறியவர்கள் பலர். அவர்களுள் மாணிக்கவாசகர்,

'உய்யும்நெறி காட்டு வித்திட்டு
ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு
அருளியவாறு யார் பெறுவார் அச்சோவே'

என்பார்.

நமக்கு உய்யும் நெறியாவது ஓங்காரமேயாகும். ஒலிவடிவம் நாதம் ஒளி வடிவம் விந்து என்பதை உணர வேண்டும்.

'எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாய நம எனும் திருவெழுத்தஞ்சாலே
அவாய மற நின்றாடுவான்' - உண்மை விளக்கம்

எண்ணையும், எழுத்தையும் தெய்வீகப்படுத்தியது தமிழ் மொழியின் சிறப்பாகும். அரிச்சுவடி மூலம் யோக நிலையும், தவம், தவத்தின் அடிப்படையிலானது ஞானம், ஞானத்தின் அடிப்படையில் அமைந்தது தமிழ்மொழி. ஞானத்தின் பால் உணர்ந்த தமிழை 'தமிழ் எங்கள் உயிருக்குநேர்' என்றும், எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் எனப் பலவாறும் சிறப்பித்துக் கூறுகிறோம்.

---

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு | N. சங்கரன், அடையாறு, சென்னை | 500 |
| திரு | P. பாலசுப்ரமணியன், திருவான்மியூர், சென்னை | 5000 |
| திரு | P. ஸ்ரீநிவாசன், மதுரவாயில், வானகரம் | 1000 |
| ஸ்ரீமதி | விஜயராணி, USA | 6700 |

# ஒப்பிலா மணியே ரமணா!

## பிர. கிரிதர ஜெகதீஷ்

"சுகார்த்தம் காம்யதே இதி காமஹ!" என்பது காமத்தைக் குறித்த லக்ஷணமாகிறது. காமஹ அல்லது காமம் என்பதற்கு ஆசை என்பது பொருள். ஒரு ஜீவனால் தன்னுடைய சுகத்தை முன்னிட்டு மனதில் கொள்கின்ற விருப்பமே ஆசை என்ற வடிவத்தைப் பெறுகிறது. ஒரு மனிதனிடம் எத்தனையோ ஆசைகள் இருக்கலாம். நான் எப்பொழுதும் சௌகரியமாக, தொந்தரவு இல்லாமல், நிம்மதியாக, சுகமாக வாழ வேண்டும் என்ற ஒரு இயல்புணர்ச்சியை மையமாகக் கொண்டே அத்தனை ஆசைகளும் எழுகின்றன. பகவான் ரமணரின் சீடர்களுள் ஒருவரான சாதுஓம் சுவாமிகள் கூறுகிறார்:

**"மனிதனிடம் புயல்போல் வீசிக் கொண்டிருக்கும் அசுத்தப்பிரிய உணர்ச்சியை சுத்த பிரிய உணர்ச்சியாக மாற்றியமைப்பதுதான் ஞான வாழ்வு."**

அவ்விதத்தில் ஐந்து படி நிலைகள் மூலமாக அசுத்தப்ரிய உணர்ச்சியானது அதாவது காமமானது சுத்த பிரிய உணர்ச்சியாக அதாவது அன்பாக மாற்றியமைக்கப்படுவதை பகவான் ரமணரின் உபதேசங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

**I. முதல்படி: தர்மப்படி ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.**

பகவான் ரமணர் தம்மை நாடிவந்த பல இல்லற அடியார்களுக்கு அவர்களுடைய மனப் பரிபாகத்திற்கேற்ப உபதேச அமுதத்தை

பரிமாறியிருக்கிறார். பகவான் ரமணரைச் சந்தித்த ஒரு இல்லறவாசி, "நீங்கள் கூறுகின்ற ஞான விஷயங்கள் எங்களைப் போன்ற சாமானிய மக்கள் கடைப்பிடிப்பதற்கு கடினமானதாக இருக்கின்றனவே. நாங்கள் உய்யும் வழி யாதோ" என்று வினவினார். அருள் ததும்பும் பார்வையோடு பகவான் கூறினார்:

"ஞான விஷயங்கள் உமக்கு விளங்கவில்லையென்றால் அதனால் ஒன்றும் நஷ்டமில்லை. பகவானைச் சரணடைய உன்னுடைய கடமைகளைச் செவ்வனே செய்து வா. இங்கே ஆச்ரமத்தில் கோசாலை இருக்கிறது. அங்கே உள்ள பசுக்களுக்கு உன்னாலான கைங்கர்யங்களைச் செய்து வா. இதே மனநிலையோடு உன்னுடைய சொந்தக் கடமைகளையும் செய்து வா. மேற்கொண்டு நடக்க வேண்டியவைகள் தாமே நடக்கும். அமைதியுற்றிரு. நல்ல பலன் கிடைக்கும்."

ஆக, பகவான் கூறுகின்ற முதல்படி 'கர்மயோகம்'. ஆச்ரமத்தில் கோசாலையில் பசுக்களுக்கு உபகாரம் செய்யும்பொழுது நிலவுகிற மனநிலையை உன் வீட்டுக் கடமைகளைச் செய்யும் பொழுதும் கைக் கொண்டிரு. சிறிது சிறிதாக நீ தூய்மையாக்கப்படுவாய். பிறகு உனக்குள் ஒளி துலங்கும். ஆரம்ப நிலையிலுள்ள ஆத்ம சாதகர்களுக்கு பகவான் வகுத்துள்ள முதல்படி இதுதான். ஆச்ரமத்தை வீடாக்கி விடாதே. மாறாக உன் வீட்டை ஆச்ரமமாக்கு.

இதனுடைய சாரம்: தர்மப்படி உன் கடமைகளைச் செய்து வா.

**II. இரண்டாம்படி: கர்மம் மட்டுமே போதாது. ஈச்வர பக்தி வேண்டும்.**

கடமையை மட்டும் செய்து வந்தால் போதாது. ஈச்வர பக்தி வேண்டும் என்பது பகவான் ரமணர் கூறுகின்ற இரண்டாம்படி.

*"ந வித்தேன தர்பணீயோ மனுஷ்ய" - "மனிதன் அர்த்த, காமங்களால் மகிழ்விக்கப்படமாட்டான்" என்று கடோபநிஷத் கூறுகிறது. பாசிகளை நூலில் கோர்த்தால் மட்டும் போதாது. நூலின் இரு முனைகளையும் ஒன்றாக்கி முடிச்சுப்போட வேண்டும். இல்லையென்றால் பாசிகள் கழன்று கீழே விழுந்து பயனற்று போய்விடும். அதுபோல ஈச்வர சக்தி இல்லாமல் கர்மங்கள் தாமே பலன் தருவதில்லை.*

*பகவான் கூறுகிறார்: "கர்த்துராக்ஞயா ப்ராப்யதே பலம் கர்மகிம் பரம் கர்மதத் ஜடம்..."*

*ஈசனின் ஆணையால் அன்றோ கர்மங்கள் பலன் தருகின்றன. காரணம் கர்மம் என்பது ஜடம். ஆக, "ஈச்வர அஸ்தித்வ நியாயத்தை" இறைவன் இருக்கிறார் என்ற உண்மையை உள் வாங்குவதை பகவான் ஆத்ம சாதகர்களுக்குரிய இரண்டாம் படியாக அமைத்திருக்கிறார்.*

*பகவான் ரமணரைச் சந்தித்து ஆசிபெற்ற பிரபல ஜோதிட சாஸ்திரி ஒருவர் பகவானிடம், "சுவாமி, மனிதனின் இன்ப துன்பங்களை நிர்ணயிப்பது கிரஹங்களின் செயல்பாடுகளே என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. பகவானின் அபிப்ராயம் என்ன" என்று கேட்டார்.*

*பகவான் கூறினார்: "ஜன்னல் திறந்திருக்கிறது. பார்க்கிறவன் உள்ளேயிருந்து பார்க்க வேண்டுமே தவிர ஜன்னலே பார்க்கிறதா? ஈச்வரனின் ஆக்ஞையின்றி கிரஹங்கள் செயல்படுவதில்லை. ஆகவே ஈச்வரனிடம் சரணடை."*

*பகவானின் சூத்திரம் இதுதான்: "ஜன்னல் பார்க்கிறதா?"*

*ஆக, கர்மம் அல்லது தர்மம் தாமாகவே பலனளிப்பதில்லை. ஆகவே ஈச்வர சக்தியை உணர்.*

**III. *மூன்றாம்படி:***

***(i) காம்ய இஷ்ட தைவ பக்தி - இறைவனின் மூலமாக ஆசைகளை நாடும் பக்தி.***

***(ii) நிஷ்காம்ய இஷ்ட தைவ பக்தி - இறைவனின் மூலமாக இறைவனையே நாடும் பக்தி.***

*ரமணாச்ரம விசேஷ நாளில் ஒரு சமயம் யானை ஒன்று வரவழைக்கப்பட்டிருந்தது. பகவான் ரமணர் யானைக்குப் பழம் ஒன்றைக் கொடுத்தார். அமெரிக்க பக்தர் ஒருவர் அக்காட்சியை அப்படியே புகைப்படம் எடுத்தார். அமெரிக்கா சென்றதும் அந்தப் புகைப்படத்தை பகவானுக்கு அனுப்பியிருந்தார். புகைப்படத்தின் பின்னால் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது.*

*"சரீரத்தை அறியாத பெரிய ஆத்மாவும், ஆத்மாவை அறியாத பெரிய சரீரமும் ஒரே இடத்தில் இருக்கின்றன."*

*அதாவது பெரிய ஆத்மா என்று ரமணரையும், பெரிய சரீரம் என்று யானையையும் அவர் குறிப்பிட்டிருந்தார். காம்ய, நிஷ்காம்ய பக்திக்கு உரிய நல்ல விளக்கமாக மேற்கண்ட வாக்கியத்தைப் பார்க்கலாம். காம்ய பக்தனும் இறைவனை நாடுகிறான். நிஷ்காம்ய பக்தனும் இறைவனை நாடுகிறான். பார்வையில் இருவரும் ஒரே நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. நண்பர்கள் இருவர் சினிமாப்படம் பார்க்கிறார்கள். அவர்களில் ஒருவன் படத்தை மட்டும் பார்க்கிறான். மற்றொருவன் படத்தைப் பார்ப்பதோடு திரையையும் தம்முடைய கவனத்தில் கொண்டிருக்கிறான். பகவான் ரமணர் கூறுகிறார்: "கொடுப்பவன் பெரிதா அல்லது இந்தக் கொடுத்த பொருள் பெரிதா?"*

*இறைவனின் மூலமாக உலகப் பொருள்களை அனுபவி. தவறில்லை. ஆனால் அதைவிடவும் அவற்றைக் கொடுக்கின்ற இறைவன் அதிகம்*

மதிப்பு உள்ளவன். ஆகவே உலகக் கவர்ச்சியின் பின்னால் சென்றுவிடாதே. காம்யத்தை பயன்படுத்து. நிஷ்காம்யத்தை மனதில் வை.

பகவான் வகுத்துள்ள மூன்றாவது படி இதுதான்.



IV. நான்காம்படி: குரு பக்தி.

இஷ்ட தெய்வமே குருவாக வருகிறார் என்று அறிதல்.

ஆத்ம சாதகன் அடைகின்ற முக்கியமான படிநிலை இதுதான். வீட்டினுடைய நிலைக்கால் (நுழைவாயில்) போல ஆத்ம சாதன வாழ்வில் குருவினுடைய அறிமுகம் என்பது அமைந்திருக்கிறது. அந்நிய பக்தியிலிருந்து அனன்ய பக்தியில் காலெடுத்து வைக்கும் பேற்றை சாதகன் இந்நிலையில் அடைகிறான். அதாவது தம்மால் தேடப்படும் இறைவன் தம்மிடமே இருக்கிறார் என்ற உணர்வு பரிபாகத்தை ஆத்ம சாதகனானவன் குருவின் மூலமாகவே எய்துகின்றான். பகவான் ரமணரின்

கூற்றுப்படி ஆத்மாவே குருவாக எழுந்தருளியிருக்கிறார். தன்னுடைய பாரமார்த்திக பேருண்மையே தம்முன்னால் குருவாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பது பகவான் ரமணர் தருகின்ற குரு லக்ஷணமாகிறது.

ஒருவரை குருவாய் ஏற்று அவரை நமஸ்காரம் செய்வதால் ஏற்படும் பிரயோஜனம் என்ன என்று இளைஞன் ஒருவன் பகவான் ரமணரிடம் வினவினான். அகந்தை அடங்குவதே நமஸ்காரத்தின் தாத்பர்யம் என்று பகவான் பதிலளித்தார். குருவருளால் இறைவனை அடையும் தகுதியும், பக்குவமும் கிடைக்குமல்லவா என்றான் இளைஞன். அதற்குக் குருவைச் சரணடைய வேண்டும் என்றார் பகவான். அப்படி சரணாகதி அடைந்தபின் மனதின் போக்கு எவ்வாறிருக்கும் என்று தொடர்ந்து வினா எழுப்பினான் இளைஞன்.

பகவான் கூறினார்: "சரணாகதி அடைந்த மனம் இவ்விதம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்காது என்பதை முதலில் புரிந்துகொள். எதைப்பற்றியும் ஆலோசித்துக் கணக்குப் பார்க்காமல் பூரணமாகச் சரணடைய வேண்டும். நம்மைவிட மேலான ஒரு சக்தியாக குருவைப் பார்க்க வேண்டும். அதன்பின் ஆத்ம சக்தியானது துரிதகதியில் வேலை செய்வதைப் பார்ப்பாய்." குரு பக்தி வேண்டும் என்பது பகவான் ரமணர் போட்டு வைத்திருக்கும் நான்காம் படியாகத் திகழ்கிறது.

**V. ஐந்தாம்படி: "பரமனைத் 'தான்' என்று உணரும் ஸ்வாத்ம பக்தி."**

நான் என்ற சப்தத்திற்குரிய சரியான பொருளை அறியாமல் மனிதன் துயருறுகிறான். பார்சலைப் பிரித்துப் பெட்டியை பீரோவிலும், நகைகளைக் குப்பைத் தொட்டியிலும் போட்டு விடுவதைப் போன்ற மதியீனத்தை ஆத்ம அநாத்ம

விஷயத்தில் மனிதன் செய்து விடுகிறான். ஆத்மா அலட்சியப்படுத்தப்படுகிறது. அநாத்மாவாகிய சரீரம் லக்ஷியப்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட காட்சிப் பிழையால் மரணபயம் தோன்றுகிறது. ரமண சந்நிதியில் பிழையானது சரிசெய்யப்படுகிறது.

ரமண சந்நிதியில் நிகழ்ந்த ஸத் சம்பாஷணையைக் கேட்போம்:

கேள்வி: தியானத்தில் சில நிமிடங்களுக்குள் ஒன்றும் தோன்றாத நிலையும், மரண பயமும் ஏற்படுகிறதே?

பகவான்: அவ்வாறு உணர்பவர் யார்?

கேள்வி: பகவான் சொல்வது புரியவில்லை. 'அஹம் பிரம்மாஸ்மி' என்று தியானிக்கலாமா?

பகவான்: 'அஹம் பிரம்மாஸ்மி' என்று நினைப்பது யார்? பிரம்ம ஸ்வரூபம் என்பது யதார்த்த நான். அது நான் பிரம்மம் என்று நினைக்காது. அவ்வாறு நினைப்பது உன்னுடைய போலி அகந்தையே. 'நான்' என்று ஒன்று கிளம்பிய பிறகே மரணபயம் தோன்றுகிறது. யாருடைய மரணத்தைப் பற்றி யார் பயப்படுகிறான்? ஆத்மாவையும், உடலையும் ஒன்றாகப் பிணைப்பதாலேயே மரண பயம் உண்டாகிறது. ஆகவே மற்ற நினைவுகளை அஹம் பிரம்மாஸ்மி என்ற ஒரு நினைவில் ஒடுக்கி, பிறகு அஹம் பிரம்மாஸ்மி என்று நினைப்பதும் எது என்று கவனிக்க வேண்டும். கவனித்தால் அகந்தை ஒடுங்கிவிடும். பரமாத்ம ஸவரூபமே நானாக விளங்கும்.

பரமாத்ம ஸ்வரூபத்தை ஸஹஜாத்ம ஸ்வரூபமாக உணர வைக்கும்படி செய்வதே பகவான் ரமணரின் சங்கல்பம். பகவான் ரமணர் தருகின்ற ஒவ்வொரு உபதேசமும் ஒப்பிலா மணிகளாய் ஒளிர்கின்றன. அவையனைத்தும் ஆத்ம அனுபூதி ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டிருக்கின்றன.

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹன்

*சொக்கப்ப நாய்க்கர் மதுரை சந்தில்இ*
*லக்கம் பதினொன்னில் லீலையாய் -மிக்கதோர்*
*அச்சமாம் காலனை துச்ச மெனவுதைத்த*
*அச்சிறுவன் தாளே அரண்* *(21)*
*(காப்பாகவும் வைத்துக் கொள்ளலாம்)*

## பகவான் மொழிதல்

*சித்தப்பா வீட்டில்நான் செத்தப்பா ஆனதும்*
*முத்தாய்ப்பாய் கேட்டேனோர் சத்தத்தை -வத்தாத*
*ஜீவநதி "நான்ஆன்ம" சாகர சங்கமிப்பை*
*சாவதனில் கொண்டேன் சுகம்* *(22)*

*வந்தது சாவு வரட்டுமே சாவென்றால்*
*எந்தஎது சாகிறது என்றவினா -தந்த*
*பலத்தால் மரண பயத்தை எதிர்த்தேன்*
*களத்தில் இறந்தது கூற்று* *(23)*
*(களம்: வாழ்க்கையாகிய போர்க்களம்; கூற்று: யமன்)*

*வந்த இறப்பை வரவேற்று வாசியின்றி*
*அந்தநிலையில் ஆழ்ந்து அடுத்ததாய் -இந்த*
*உடலை எடுத்து சுடலை நெருப்பில்*
*விடுவதைப் பார்த்தேன் வியந்து* *(24)*
*(பகவானது மரணானுபவத்தை 24, 25 பாடல்கள் எடுத்துரைக்கின்றன)*

*உடல்போன பின்பும் உயிர்போன பின்பும்*
*கடல்போல என்னிருப்பைக் கண்டேன் -மட'நான்'போய்*
*தான்குவித்த குப்பையை தானே களைந்தது*
*நான்கவஸ்த்தை தாண்டிய "நான்"* *(25)*

*[நான்கு அவஸ்தை = சுஷுப்தி (ஆழ்ந்த உறக்கம்), ஸ்வப்னம் (கனவு), ஜாக்ரத் (விழிப்பு), துரியம் (எல்லாம் கடந்த மெய்ந்நிலை]*

## ஞான காண்டம்

*பிறவிப் பிணியை அறவே அகற்றி*
*துறவுக்கும் அப்பால் திகழ்ந்த -பரிசுத்த*
*ஆவியைக் கண்டதால் அர்ச்சிப்பீர் "பகவானாய்"*
*காவிய கண்டமுனி கூற்று (26)*

இகவாழ்வின் அச்சம் இயலாமை கோபம்
புகவொண்ணா சாத்வீகம் பெற்றும் -பகவானை
மண்ணிட்ட மீனாக மாற்றியது , தண்ணீராம்
அண்ணா மலையார் அழைப்பு *(27)*

நானாட்சி போனதால் நாடுடல் நாட்டம்போய்
வானாச்சு, மண்ணாச்சு வீரமெலாம் -மீனாட்சி
சுந்தரேஸர் முன்பு சிலிர்த்துகுக்கும் கண்ணீரை
இந்தரோஷம் ஆன்மன் இயல்பு *(28)*

(ஆத்மாவின் இயல்பு எதையும் துச்சமென எண்ணும் வீரம் அதுவே இறைவன்முன் பணிந்து கண்ணீர் மல்குகிறது)

வந்தான்ம வெள்ளத்தில் தன்தேகம் ஆட்டமுற
சந்தேகம் கொண்டார் சுரமென்று -பிந்தையோர்
போதில் " இருந்துட்டு போகட்டும் என்றிருந்தேன்
ஏதோ சுகமிருந்த(து) என்று *(29)*

விளக்கெண்ணை போன்ற இலக்கண பாடம்
கலக்கிட வேம்பாய்க் கசந்து -இலக்கில்லா
நீண்ட வெளிதனில் மூண்ட பரவசத்தில்
ஆண்டவன் போலானான் ஆழ்ந்து *(30)*

தம்பியின் மேல்வைத்த நம்பிக்கை பொய்த்திட
வெம்பிய அண்ணன் வெகுண்டுரைத்தான் -கொம்பையும்
சொம்பையும் ஏந்திடும் சாமியார் வாழ்க்கைக்கு
சம்பளக் கல்வி செலவு *(31)*

அன்பால் உரைத்தது அம்பாய் உறுத்திட
கண்பாரா காட்சி குருடனுக்கேன் -தன்போர்வை
ஆவணக் கல்வியல்ல கோவணச் செல்வமென்றான்
மூவிழிக் காரன் மகன் *(32)*

அண்ணனே முன்வந்து அஞ்சுரூ பாதந்து
தின்னது போதுமெனத் திட்டிவிட்டு -தன்னுடைய
கல்லூரி சம்பளமாய் கட்டென்(று) உரைத்தது
செல்அருணை ஆச்சு செவிக்கு *(33)*

நானென் தகப்பனை நாடியவர் உத்திரவால்
காணப் புறப்பட்டேன், ஏனென்று -வீணாய்
விசனமேதும் வேண்டாம் வெகுநல்ல கார்யம்
அசலம்தான் இதுக்கிங்(கு) அகம் *(34)*

என்று கடிதம் எழுதியதும் இப்படிக்கு
ஒன்றுமே போடா(து) உணர்ந்தவன் -இன்றண்ணன்
சம்பளம் கட்டவில்லை என்பதைப் பின்குறித்து
தன்பலம் நோக்கித் தவம் *(35)*

தாதை தெரிந்தாலும் கீதை புரிந்தாலும்
பாதை அறியாத பார்த்தனாய் -ஏதோ
ரயிலேறிச் சென்றான் ரகசியமாய்த் தன்னை
கயிலாயன் கையில் கொடுத்து *(36)*

வண்டி ரயில்போகும் திண்டிவனம் தானென்று
பண்டித முஸ்லீம் பயணிசொல்லி -அண்டி
அருகமர்ந்து இஸ்லாமை ஆராயக், கற்றான்
குருவருவார் எவ்வடிவும் கொண்டு *(37)*

விழும்புறத்தை வென்றோன் தொழும்முஸல்மான் தோளில்
விழுப்புணர்வு நீங்க விழித்தான் -விழுப்புரத்தில்
வில்ளல் பேரிக்காய் வள்ளலாய்ப் போக்கியது
பிளைப் பசிக்கொடுமை பார்த்து *(38)*

பட்டுச் சிவப்பாக கட்டுக் குடுமியில்
நிட்டையில் நின்றவரின் ஞானத்தில் -கட்டுண்டு
முட்ட உணவிட்டு மாம்பழப் பட்டுசெல்ல
துட்டைத் திணித்ததவர் தொண்டு (39)

தரைவழி சென்றோன் இருள்வரும் நேரம்
அறையணி நல்லூர் இறைவன் -கருவறை
முன்வாசல் மண்டபத்தில் கண்கூசும் ஜோதியில்
தன்கோசம் தான்மறந்தான் துய்த்து (40)

# இனிவரும் திருநாட்கள்
## 2016 & 2017

| | | | |
|---|---|---|---|
| *அக்டோபர்* | 29 | *சனி* | *தீபாவளி* |
| *டிசம்பர்* | 03 | *சனி* | *கார்த்திகை உற்சவம் தொடக்கம்* |
| | 12 | *திங்கள்* | *கார்த்திகை தீபம்* |
| *ஜனவரி* | 12 | *வியாழன்* | *ஸ்ரீபகவான் 137ஆவது ஜயந்தி* |
| | 14 | *சனி* | *பொங்கல்* |
| *பிப்ரவரி* | 10 | *வெள்ளி* | *சின்னஸ்வாமிகள் ஆராதனை* |
| | 15 | *புதன்* | *சுந்தரம் ஐயர் தினம்* |
| | 24 | *வெள்ளி* | *மஹா சிவராத்திரி* |
| *மார்ச்* | 17 | *வெள்ளி* | *ஸ்ரீவித்யா ஹோமம்* |
| | 29 | *புதன்* | *தெலுங்கு வருடப் பிறப்பு* |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2016

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *அக்டோபர்* | 15 | *சனி* | *காலை* 11 | 16 | *ஞாயிறு* | *காலை* 10.55 |
| *நவம்பர்* | 13 | *ஞாயிறு* | *காலை* 10.07 | 14 | *திங்கள்* | *காலை* 7.08 |
| *டிசம்பர்* | 13 | *செவ்வாய்* | *காலை* 8.23 | 14 | *புதன்* | *காலை* 6.23 |

# பேரமைதி நிலவிய திருநாட்கள் – 1

## மௌனி சாது

### 1. ஞானியருடன் கூட்டு கண்டேன்

*“சத்யத்தை உணர்ந்த ஞானியருடன் ஏற்படும் சத்சங்கத் தொடர்பால் லோகாயதப் பற்றுகள் நீங்குகின்றன. இப்பற்றுகள் நீங்கும்போது மனத்தின் கட்டுகள் அறுபடுகின்றன. இங்ஙனம் பற்று நீங்கிய மனம் பெற்றவர்கள் அசைவற்ற ஸ்திரமான ஆத்மாவுடன் ஒன்றாகின்றனர். அத்தகையோர் ஜீவிய வந்தராய் இருக்கும்போதே ஆத்ம சாட்சாத்காரம் அடைகின்றனர். எனவே ஞானியருடன் தொடர்பினை போற்றுக.” (உள்ளது நாற்பது அனுபந்தம், 1)*

*இதே பாடலின் இன்னொரு விளக்கம்:*

*“ஆத்மாவை அறிந்த ஞானியருடன் ஏற்படும் சத்சங்கம், பௌதிகமான தொடர்புகளை அறுக்கிறது. இந்தத் தொடர்புகள் அறுபடும்போது, முந்தைய கர்மங்களாலும், இப்போதைய மனக் குழப்பத்தாலும் ஏற்பட்டுள்ள மனத்தடைகள் சிதைந்து அழிகின்றன. பற்றற்ற ஒருவன் அடையும் சாந்தி நிலைதான் ஆத்மா. அது என்றும் மாறாத ஒன்று. இது என்றும் இடம் பிறழாத ஒன்று. அதுவே ஜீவன் முக்தி நிலை. இது இங்கேயே இப்போதே பெறப்படுகிறது. அத்தகைய பரம சாந்தி நிலையை அடைந்த பெரியோர் இணக்கத்தைப் பேணுக.”*

*நான் இந்தியாவை விட்டு நீங்கிய ஆறு மாதங்களுக்குள் பகவான் இவ்வுலகை நீத்தார். அவரது இறுதி வாசகம்*

*[ஸ்ரீ ரமணாச்ரம வெளியீடான* In Days of Great Peace *என்ற நூலிலிருந்து]*

இதுவே: "நான் மரணமடைந்து செல்வேன் என்று இவர்கள் கூறுகின்றனர். ஆனால், நான் இங்கேயே முன்னை விடவும் உயிர்த் துடிப்புடன் இருப்பேன். நான் வேறு எங்கு போய் விடப் போகிறேன்?"

ஆச்ரமத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் வசிக்கும் பல்வேறு சீடர்கள் பகவான் மகா நிர்வாணம் அடைந்ததை அன்றே அறிந்து கொண்டனர். இந்தச் செய்தி உலகெங்கிலும் பரவிய வேகம், பரம்பொருள் சக்தியால் மட்டுமே இயலுவதாகும். பகவான் தன் இறுதி மூச்சினை விடுவதற்கு பல மணி நேரத்திற்கு முன்னமேயே இந்த உணர்வைத் தாண்டிய ஒலி பரப்புறத் துவங்கி விட்டது என்றே தோன்றுகிறது.

இந்தியாவிலிருந்து எனக்குத் தபால் வர, குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அவற்றிலிருந்து நான் பெற்ற விஷயம் என்னவெனில், பகவானின் எந்த ஒரு பக்தருமே இந்த மகா நிர்வாணச் செய்தி கேட்டு வருத்தமோ, பதற்றமோ கொள்ளவில்லை. ஆச்ரமத்தில் வசித்தவரும் சரி, வெளிநாட்டு அன்பர்களும் சரி, எல்லோர் இதயத்திலுமே ஓர் இணையற்ற தூய ஆத்ம சாந்தியும், ஆன்ம ஒளியும் குடிகொண்டிருந்தது.

"எப்படிக் கனவானது, விழிப்புற்ற ஒருவனுக்குப் பொய்யான ஒன்றோ, அதேபோன்று இப் பௌதிக உலகமும் நமது விழிப்புற்ற ஆத்மாவுக்குப் பொய்யான ஒன்றாகும். அது ஒரு நிழலைப் போன்ற பொய்த் தோற்றமே. விழிப்புற்ற மனிதன், தான் முன்னாள் இரவில் கண்ட கனவினைக் குறித்துக் கவலை கொள்வானா? அன்றி, தன் உடலால் தோற்றுவிக்கப்படும் நிழலைக் கண்டு அஞ்சுவானா?" (திருவருண்மொழி)

"உலகில் பயிலப்படும் எந்த ஒரு சமயமுமே, மனித சமுதாயத்திற்கு ஆன்ம விழிப்பை முழுவதுமாய் உண்டாக்கி சமுதாயத்தினை ஆனந்த மயமாக்குவதில்

*இன்னும் வெற்றி பெறவில்லை. ஆனால், ஒவ்வொரு சமயமும், தனி மனிதனுக்கு ஆன்ம விடுதலையை அளிக்கத்தான் செய்கிறது." (ஸ்ரீ அரவிந்தர்)*

முற்றும் உணர்ந்த ஒரு ஞானியின் ஆன்ம விகாஸம் மிகத் தெளிவாகவும், நேராகவும் அவரது சம காலத்திய மக்களால் உணரப்படுகிறது. காலம் செல்லச் செல்ல ஞானியின் ஆன்ம விகாஸம், பின்பற்றுவோரால் வெறும் வறட்டுக் கொள்கையாகப் பின்பற்றப்படுகிறது. பக்தர்கள் அந்த ஞானியை ஒரு புகழ்ச் சட்டத்தில் அடக்கி, அவருக்கு ஆலயங்கள் அமைத்து, அவரை குறுகிய சுவர்களுக்குள் சிறைப்படுத்தி விடுகின்றனர். அவர் வழங்கிய ஆத்மிக உபதேசம் வலுவிழந்து, ஆன்ம விழிப்பு வழங்கும் உயர்நிலையில் இருந்து வீழ்கிறது. அந்த ஞானி கூறிய ஒவ்வொரு உபதேசச் சொல்லுக்கும் வெவ்வேறு பொருட்களைக் கண்டு, பின்வரும் சீடத் தலைமுறைகள் தம்முள்ளே சண்டை இட்டுக் கொள்கின்றனர். "நாங்கள் கூறும் விளக்கமே சரி" என்று முழங்குகின்றனர். அம் மகான் கூறிய மிக முக்கிய உபதேசமாகிய, "நீ என்னைப் போலவே பரிணாமம் அடைவாயாக" என்பதைத் தவிர மற்றெல்லாவற்றையும் செய்கின்றனர்.

இது பெரும்பாலும் உண்மையே. எனினும் எல்லா விதைகளுமே கற்பாறைகளில் விழுந்து விடுவதில்லை. பண்பட்ட நிலத்தில் விழுந்த விதைகள் ஏராளமான விளைச்சலைத் தருகின்றன. அதில்தான் தவறுகின்ற இம்மனித சமுதாயத்தின் கதி மோட்சம் அடங்கி உள்ளது. பகவான் போன்ற மகான்களின் வாழ்வே இதற்கு நிரூபணம். வானத்தில் எழுந்து ஓங்கும் விண்மீன் போன்று, அவர்கள் காரிருளிலும் ஒளி கூட்டுகின்றனர்.

பேரிருளிலும் வழிகாட்டும் இந்தப் பேரொளியைக் காண்பவர்கள் சரியான பாதை எங்கே உள்ளது என்பதைக் கண்டறிகின்றனர்.

(இன்னும் வரும்)

# பகவான் பகர்ந்த தாலாட்டு கீதம்

## கௌதமன்

*['அத்வைத தீபிகை' என்னும் ஸ்வாமி அத்வயாநந்த சரஸ்வதி உரையின் பாற்பட்டது. கருத்தாழம் கருதி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.]*

*பாடல்:*

*கேள்வியினால் மனனத்தால் கிளர்ந்த யோகங்களினால்*
*ஆழ்பிரமத்து அனுபவம்வந்து அதுதீரும் என்றவரோ (57)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: ஆசானிடம் வேதாந்த ஞானநூல்களைக் கேட்பதன் மூலமும் (சிரவணம்) அங்ஙனம் கேட்ட, பயின்ற நூல்களின் ஆழ்ந்த பொருளை தனித்தே இருந்து சிந்தித்து மனதில் பதியவைக்கும் மனனத்தாலும், அந்த ஞானத்தினாலேயே இடைவிடாது மனத்தில் ஆறு, நெய்வீழ்ச்சி எண்ணி அதிலேயே ஒன்றி இருக்கும் நிதித்யாசனத்தினாலும், இறுதியில் பிரம்மானந்த அனுபவம் வரும். அப்போதே தேகாத்ம பாவம் (சரீரத்தை நான் என்று தவறாக எண்ணும் நிலை) நீங்கும். [இங்ஙனம், சிரவண, மனன, நிதித்யாசனம் செய்து அநுபவ ஞானம் அடையும்வரையில் தேகாத்ம பாவம் நீங்காது] என்று கூறினீர்கள் அல்லவா!*

*பாடல்:*

*ஆதியாம் சிற்சொரூபம் ஆகாத தான்இனிமேல்*
*சோதிமனம் ஆதியினால் சொரூபம் ஆமோஎனவே (58)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: எல்லாவற்றிற்கும் ஆதிமுதலாய் பேரறிவு வடிவமாக பிரம்ம ஸ்வரூபம் ஆக உள்ளதை இதுவரை உணராத நான், நீங்கள் கூறிய ஸ்ரவண, மனன, நிதித்யாசன வழியைப் பின்பற்றினால் மட்டும் பிரம்ம ஸ்வரூபம் ஆதல் எங்ஙனம் முடியும்?*

*பாடல்:*

*எப்போதும் சின்மயம்தான் எனல்மறந்து தேடுவது*
*செப்பும்மிடற்று அணியிருக்கத் தேடுதல்போல்*
*என்றவரோ (59)*

*விளக்கம்:*

*கண்ணன்: ஆத்மாவாகிய நான் எப்போதும், எக்காலத்தும் சின்மய ஸ்வரூபமாகிய பிரம்மமாக இடையறாது இருப்பதை மறந்து, 'நான் எந்தவழியில் சென்று பிரம்மத்தை அடைய முடியும்?' என்று கேட்பது, உன் கழுத்திலேயே ஆபரணம் இருக்கும்போது, அது எங்கே இருக்கிறது என்று தேடுதலே போலாகும் என்று கூறினீர்கள் அல்லவா?*

*(இதே உவமையினை பகவானும் கூறி உள்ளார்.*

*"தன் கழுத்திலேயே இருந்த ஆபரணத்தைக் காணவில்லை என்று தேடிய ஒருத்தியைக் கண்ட அவளது தோழி அவளுக்கு அதை உணர்த்த அவள் துயரம் நீங்கினாள். இருப்பதை உணராத அறியாமையே இங்கும் துக்க ஹேது ஆயிற்று. அவ்வாறே நீங்காது என்றும் உள்ள தன் ஸ்வரூபத்தை உணரா அறியாமையே துக்கத்தின் மூலகாரணம். தன்னை உணர்வதால் துக்கம் அறவே நீங்கி ஆனந்தமயம் ஆகி நாமே இருப்பதைக் காண்கிறேன்" - ஸ்ரீபகவத் வசனாம்ருதம் 61, ஜூலை 6, 1935, ப. 93)*

*பாடல்:*

*தேடியபின் தேகபுத்தி தீர்ந்துபோய் சிற்சொரூபம்*
*கூடுவனோ யான்என் குறைதீரச் சொல்லும்என (60)*

*அர்ஜுனன்: (நீங்கள் கூறியபடி) சிரவண, மனன, நிதித்யாசனங்களை நான் பயின்று தேடியபின், 'நான் தேகம்' எனும் தேகாத்மபாவம் நீங்கி, ஞானமே வடிவான பிரம்ம ஸ்வரூபத்தை நான் அறிந்து ஒன்றாவனோ? என் மனக்குறை தீரும்படி விளக்குங்கள்."*

*வந்தஉடல் வேறாயும் வாசனையால் தான்எனலால்*
*சந்தயம் என்தன்சொருபம் தானாதற்கு என்றவரோ (61)*

*விளக்கம்:*

*அர்ஜுனன் (மீண்டும்): கர்மத் தொகுதியால் வந்த உடல், தான் எனும் ஆன்மாவுக்கு வேறாக இருந்தாலும், பல பிறப்புகளின் கர்ம-வாசனைத் தொகுதியால் அந்தச் சரீரமே தான் என அறியாமையினால் பலர் கூறுகின்றனர். தன்னுடைய உண்மை வடிவமே ஆன்மாதான் என்று உணரமுடியாமல் தடுக்கும் சந்தேகம் ஏன் ஏற்படுகின்றது? சந்தேகம் இல்லாமல் நீ பிரம்மமே என்று நீங்கள் கூறி உள்ளீர் அல்லவா?*

*[57ஆம் பாடலில் தொடங்கி வழக்கமாகப் பின்பற்றப்பட்ட கோயிலூர் மடப்பதிப்பு தொடர்ந்து மீண்டும் காண்போம்.]*

*பாடல்:*

*கருமயோகம் தவமே காரணமா நீங்காமல்*
*அருமையா ஞானம் வந்தோ அஞ்ஞானம்போல் எனவே*
*(57)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: அஞ்ஞானமானது, யாகம் போன்ற கர்மங்கள் பிராணாயாமம் யோகம் போன்ற சாதனங்கள், மற்றும் உடலை வருத்திச் செய்யும் தவம் போன்றவையால் நீங்காமல் அடைவதற்கு அருமையான ஞானம் வந்தபின் நான் நீங்குமா?*

*பாடல்:*

*குத்துவெட்டும் படைகளினால் கூடுமோ இருள்துரக்க*
*உத்தமம்ஆவி ரவி உதித்தால் ஓடும்இருள் என்றவரோ (58)*

*கண்ணன்: குத்தவும் வெட்டவும் பயன்படும் ஆயுதங்களால் பேரிருளை நீக்க இயலுமோ? (இயலாது). உத்தமமான சூரியன் உதித்தால், அப்பேரிருள் நீங்கிவிடும். (அதுபோலவே, யாகம் முதலிய கர்மங்கள் யோகம், தவம் இவற்றால்*

*அஞ்ஞானம் அழியாது. ஞானம் எழுச்சி பெற்றால் மட்டுமே அஞ்ஞானம் நீங்கும்).*

*பாடல்:*

*அஞ்ஞான இருள்துரக்க அறியாத நல்லகன்மம்*
*மெய்ஞ்ஞாலம் தனைப்பரிக்கும் விதம்எவ்வாறு*
*எனவினவ (59)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: அஞ்ஞானம் என்ற பேரிருளை நீக்க நல்ல கருமங்கள் செய்வது எதுவுமே உதவாது என்றால், இந்த உலகில் நான் செய்கின்ற நல்வினைகளால் எனக்கு ஏற்படும் பயன்தான் என்ன? மெய்ஞ்ஞானத்தை உதிக்கச் செய்யும் வழிதான் என்ன?*

*[சிவாநந்த சுவாமிகள் பதிப்புப்படி உள்ள இரண்டு மிகைப் பாடல்கள்:]*

*பாடல்:*

*கருமம் இருவகையாம் காமியநிட்காமியம் எனும்*
*இருவகையினில் காமம் ஏதுகாண் என்றவரோ (60A)*

*விளக்கம்:*

*கண்ணன்: காம்ய கர்மம் (ஒன்றை அடையும் இச்சை கொண்டு செயும் செயல்), நிஷ்காமிய கர்மம், (இச்சை ஏதுமின்றி ஆற்றப்படும் செயல்) எனக் கருமம் இருவகைப்படும். இந்த இருவகைகளில் நிஷ்காமிய கர்மம் ஞானத்தை அடையக் காரணமாய் அமையும் என அறிவாய்.*

*பாடல்:*

*கருமமே காரணமாய்க் கட்டுரைத்தீர் இவ்வுலகை*
*ஒருவும் வகையை எனக்குஓதுஎன்று அடிபணிய (61A)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: நிஷ்காம்ய கர்மமே ஞானம் உதிக்கத் துணை செய்யும் என்று கூறி அருளினீர். நம் கண்ணுக்கு எதிரே பிரத்தியட்சமாய் தோன்றுகின்ற*

*இவ்வுலகத்திலிருந்து நான் நீங்கும் வழியை எனக்குக் கூறி அருள்வீர் என்று அடிபணிந்தான்.*

*பாடல்: [கோவிலூர் பதிப்பு மூலம்]*

*இந்திர சாலம்போல இவ்வுலகை நம்மிடத்தில்*
*தந்திரமாத் தோற்றுவித்தோம் சத்யம்அல என்றவரோ(60)*

*விளக்கம்:*

*கண்ணன்: மாய வித்தைகள் செய்யும் மந்திரவாதியின் வித்தையினால், தோற்றுவிக்கப்படும் பொய்ப்பொருட்கள் எல்லாம் பார்ப்பவனுக்கு நிஜமான பொருளாகத் தெரிவதுபோன்று, பிரம்ம சொரூபமாகிய நம்மிடத்தில், பொய்யான இவ்வுலகை, உண்மைபோலத் தோன்றும்படி விளையாட்டாகச் செய்தோம். இது உண்மையன்று. பொய்த் தோற்றமே.*

*பாடல்:*

*மித்தையெனும் சகத்துநின்பால் விளங்குமோ எனவினவ*
*சுத்திதனிலே ரசதம் தோன்றுதல்போல் என்றவரோ (61)*

*அர்ஜுனன்: பொய் என்று ஞானியர் கூறும் இவ்வுலகம் சத்ய பிரம்ம ஸ்வரூபமாகிய உன்னிடத்தில் எப்படித் தோன்றும்?*

*கண்ணன்: உண்மையாக உள்ள கிளிஞ்சலில் (நமது தவறான பார்வையால்) பொய்மையாகிய வெள்ளி தோன்றுதல்போல் சத்யமான எம்மிடத்தில் மித்யை ஆகிய இவ்லகம் தோன்றுகிறது.*

*பாடல்:*

*அயல்வெள்ளி சுத்தியின்மேல் ஆரோபிதம் கூடும்*
*இயல்உள்ள சகமும் முன்வேறு இருந்ததும்உண்டோ*
*எனவே (62)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்:வெள்ளி என்று ஒருபொருள் இருப்பதை நான் முன்பே அறிவேன். அதனால், திருஷ்டிகோன்*

*தவறால் கிளிஞ்சலின் பளபளப்பைக் கண்டு தவறாக வெள்ளி என நினைக்கிறேன்.*

*ஆனால் இந்த உலகத்தை நான் கண்டுஅறியும்போது இந்தத் தோற்றத்துக்குமுன் சத்யமாக நீங்கள் சிருஷ்டித்த சத்யமான பிரபஞ்சம் வேறு ஒன்று உள்ளதா?*

*(வெள்ளியை நான் முன்பே பார்த்திருந்ததால் சிப்பியில் வெள்ளியைக் காண்கிறேன். அதுபோல, நான் முன்பே ஒரு பொய்யுலகைக் கண்டிருந்தால் மட்டுமே இம்மாய உலகம் தெரியும். அப்படி ஒரு பொய்ப் பிரபஞ்சம் ஒன்று இருந்ததா?)*

*வெள்ளி: அதிஷ்டானம் (*substratum*)*

*கிளிஞ்சல்: ஆரோபிதம் (*superposition*)*

*பாடல்:*

*மனமயக்கம் பிடிக்கில்இல்லா வத்துவும்*
*தோன்றிடும்அதுவோ*
*கனவில்விண்ணில் தான்பறக்கக் கண்டதுபோல்*
*என்றவரோ (63)*

*விளக்கம்:*

*கண்ணன்: மனத்தில் மயக்கமும், குழப்பமும் இருந்தால் இல்லாத பொருளும் இருப்பதுபோல் தோன்றும். எப்படிஎனில் பறக்கும் திறனே அற்ற மனிதன் விண்ணி பறப்பதுபோல் கனவு காண்பதனைப் போல்வதாகும். (பிரபஞ்சம் ஒரு மாயை. முன்னால் இருந்தே அது இல்லாத ஒன்றே. அது அஞ்ஞானத்தினால் ஆரோபிதமாய்த் தோன்றுகின்றது.*

*பாடல்:*

*கனவுபோல் பிரபஞ்சம்என்றீர் கண்விழித்தால்*
*கனவுபொய்யாம்*
*வினவுசகம் தினமும்மெய்யா விளங்குவதுதான்*
*என்சொல்லும்என (64)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: கனவு காணும்போது நாம் மெய் என எண்ணுவதெல்லாம், கனவில் இருந்து விழித்து எழுந்து நனவிற்கு வரும்போது பொய்யாகி விடுகிறது. ஆயின், நீங்கள் 'கனவு' என்று கூறும் இவ்வுலகமோ, நான் பார்க்கும்போது, நாள்தோறும் மெய்யாக விளங்குவதாகத் தோன்றுகிறதே! இதற்குக் காரணம் என்ன?*

*பாடல்:*

*மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வரும்அளவும்*
*பொய்யாம்பின் கனவுஅதுபோல் போதம்வரில்*
*என்றவரோ (65)*

*விளக்கம்:*

*கண்ணன்: தத்துவ ஞானம் வருகின்ற வரையில்தான் பொய்யான இவ்வுலகம் மெய்போலக் காணும் மெய்ஞ்ஞானம் வந்தபின்னர், கனவில் காணும் உலகம்போலவே விழிப்புநிலையில் நாம் கண்ணால் காணும் உலகமும் பொய்யே என்று விளங்கும்.*

*பாடல்:*

*முன்புகண்ட கனவுபொய்யாம் மொழிசாக்ரம்*
*போலஎன்றீர்*
*பின்புமுத்தித் தசைஅடைந்தும் பிரபஞ்சம்நிற்பது*
*ஏதுஎனவே (66)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்: கண் விழித்துக் கொள்ளும்போது தோன்றும் விழிப்பு நிலையில் முன்புகண்ட கனவு பொய் ஆவது போல (ஞானம் பெற்றவுடன் பிரபஞ்சம் பொய்யாகிறது) என்று கூறினீர். வீடுபேற்றினை அந்த ஞானத்தால் அடைந்தபின்னும் உலகம் முன்புபோலவே தோன்றிக்கொண்டு இருக்கிறதே, அதன் காரணம் என்ன?*

*பாடல்:*

*தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போலஎன்றீர்*
*பரந்தசகம் காரியத்தில் பயன்படாது என்றவரோ (67)*

*விளக்கம்:*

*கண்ணன்:* நெருப்பினால் எரிந்துபோன முன்பு புதைத்து வைக்கப்பட்ட துணி, வெளிப்பார்வைக்கு இன்னும் மடிப்புக்கலையாத துணிபோலவே தோன்றினாலும், அது பௌதிகமான செயல் எதற்கும் பயன்படாது. அதுபோலவே, ஆத்மஞானம் அடைந்த ஞானியர்க்கு இவ்வுலகத் தோற்றமோ, அதனால் ஏற்படும் சுகதுக்கங்களோ எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஞானியர்க்கு உலகம் உண்மை அல்ல. அது வெறும் நாமரூபத் தோற்றமே. அதனால் பயன்ஏதும் இல்லை.

தெத்தபடம்: நெருப்பினால் எரிந்த, மடிக்கப்பட்ட துணி.

*பாடல்:*

*கர்மவினை அஞ்ஞானம் கடந்தும்அதன் காரியமாம்*
*புன்மைஉறு மெய்உடனே போகாதது ஏதுஎனவே (68)*

*விளக்கம்:*

*அர்ஜுனன்:* ஆகாம்ய சஞ்சித கர்மங்களும், அஞ்ஞானமும் ஞான உதயத்தால் நீங்கிய பின்னரும் இழிவுபொருந்திய இவ்வுடல், ஞானம் பெற்ற கணத்திலேயே நீங்காமல், சிலகாலம் வாழ்ந்திருப்பது ஏன்?

*பாடல்:*

*வெட்டவிழும் மரம்பசந்து விளங்குதல்போல் சிலகாலம்*
*நட்டகன்மம் மாய்ந்தும்அங்கம் நடித்திடும்காண்*
*என்றவரோ (69)*

*விளக்கம்:*

*கண்ணன்:* கோடாரியால் வெட்டப்பட்டு விழுந்த மரம், வேரின் தொடர்பு நீங்கியபின்னரும், உடனே

காய்ந்துபோகாமல் சிலகாலம் பசுமையாகத் தோன்றுதல்போல் அஞ்ஞானம் நீங்கிய பின்னரும் கர்மத் தொகுதி நசித்துப் போனாலும், இப்பிறவியில் பலன் கொடுக்கத் துவங்கிய பிராரப்த வினை அழியும்வரை உடல் சிலகாலம் நீடித்து இருக்கும்.

பாடல்:

சென்மம்போய் முத்தியினைச் சேரச்சிலர் இருக்கத்
தொன்மைஆன்மா பலவோ சொரூபம் பகரும்என (70)

விளக்கம்:

அர்ஜுனன்: சிலர் பிறப்பினின்றும் நீங்கி, ஆத்ம சாட்சாத்காரம் (வீடுபேறு) அடைகின்றனர். வேறு சிலரோ, வீடுபேற்றில் சிறிதும் நாட்டம் கொள்ளாமல், உலக விஷயங்களிலேயே பற்றுடன் மூழ்கி இருப்பது ஏன்? இங்ஙனம் ஜீவர்களில் வேறுபாடு காணப்படுவதால், ஆன்மாக்கள் பலவோ என்ற சந்தேகம் உண்டாகின்றது. ஆன்மாவின் உண்மை ஸ்வரூபத்தை விளக்கி அருள்வீராக!

பாடல்:

பிரமம்என்றும் ஈசன்என்றும் பெருகுபல சீவர்என்றும்
உரைமயக்கம் அலதுதான்மா ஒருவனே என்றவரோ (71)

விளக்கம்:

கண்ணன்: குணங்கள் ஏதுமற்ற சுத்த சைதன்ய ஜோதி வடிவான பிரம்மம் என்றும், பல்வேறு கல்யாண குணங்கள் பொருந்திய ஜீவர்கள் என்றும் வேறுபடுத்திக் கூறுவது ஒருவித மயக்கமே. உண்மையில் ஆத்மா ஒருவனே. 'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வத³ந்தி.

---


## ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# அக்ஷர மணமாலை- ஒரு தத்துவக் கருவூலம்

டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

பகுதி–3

இருபதாம் நூற்றாண்டின் ஆன்மீக தீபமாய் விளங்கிய பகவான் ரமணர் எந்த வித ஆஸ்ரம தர்மத்தையும் அனுசரிக்கவில்லை. அத்யாஸ்ரம வியக்தியாய் விளங்கிய அவர், மிக உயர்ந்த துறவு நிலையை எய்தியவர். ஆனால் காஷாயத்தை அணியவில்லை. அவருக்கு சிருங்கேரி மடத்தைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் சன்யாச தீக்ஷை அளிக்க விரும்பினார். திருவண்ணாமலையைச் சுற்றி 27 மைல் தூரத்திற்குள் வசிப்பவற்கு தனியே தீக்ஷை முதலிய நியமங்கள் தேவையில்லை என்பதற்கான ஆதார ஸ்லோகம் ஒன்றை பகவான் அளிக்க அந்த அந்தணரும் அம்முயற்சியினைக் கைவிட்டார். ரமணரை நன்கு அறிந்த சிருங்கேரி மடத்து தலைவராக விளங்கிய நரசிம்ம பாரதி சுவாமிகள் இனியும் அது போன்ற முயற்சிகளில் இறங்க வேண்டாமென்று சீடர்களுக்கு அறிவுரை கூறினாராம்.

இதற்குக் காரணம் என்ன?

இறைவனை அடைய வெளிப்படையான ஆசாரங்கள் ஓரளவுக்கு உதவுகின்றன. ஆரம்பகாலத்தில் நமக்கு சில அடிப்படையான கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் அவையே இறுதிப் பயனாம் இறையுணர்வை அளிக்கப் போதுமானவை அல்ல. இதை நாவுக்கரசரும் அழகான முறையில் தெளிவு படுத்துகிறார். குறிகளும் அடையாளமும் கோவிலும் நெறிகளும் வெளிச்சின்னங்களே. அவை இறைவனை உள்ளே

பார்க்க உதவாது என்கிறார். ரமணாஸ்ரமத்தில் ஒரு சிஷ்யை மௌனவிரதம் அனுஷ்டித்து வந்தார். ஒரு முறை அவர் எதையோ தெரிவிக்க விரும்பி, அதைக் காகிதத்தில் எழுதி ரமணரிடம் கொடுக்க, அவர் சிரித்து இதுவா மௌன விரதம்? நாக்கு மட்டுமல்ல, மனமும் மௌனமாகவேண்டும். அதுவே மௌனம் என்றாராம். வெளி வேஷங்களும் ஆசாரங்களும் முடிவான ஒரு நற்பயனை அளிக்க உதவக் கூடும். ஆனால் அவையே முடிவாகாது என்பதில் ரமணர் உறுதியாக இருந்தார்.

இதை அக்ஷரமணிமாலையிலும் தெளிவு படுத்துகிறார்.

மௌனியாய் கற்போல் மலராது இருந்தால்
மௌனம் இது ஆமோ அருணாசலா (87)

மனதின் கட்டுப்பாடே தியானம் ஆகும். அது நிலை பெறாத நிலையில் வெறும் வாயினால் பேசாதிருக்கும் விரதம் அனுஷ்டித்தால் பயன் ஏதும் இல்லை. எல்லா அனுஷ்டானங்களும், ஆர்ப்பரிக்கும் மனதைக் கட்டுக்குக் கொண்டு வரும் தன்மை படைத்தவையாக அமைதல் அவசியம். இதை பகவான் ஒரு அழகான பதத்தால் குறிக்கிறார். மனதைக் கட்டுப்படுத்தல் என்பது ஆரம்ப நிலை. அதை மலரச்செய்தல் என்பது பேரின்ப நிலை. அந்நிலை அமையப் பெறாது, மனதைக் கல் போல வைத்தல் பயனற்றதாகும்.

இச்சமயத்தில் சிவநேசச் செல்வர்கள் பெரிதும் போற்றி வீடுகளிலும் ஆலயங்களிலும் ஜபிக்கும் ஸ்ரீருத்ரத்தில் உள்ள வரிகளை நோக்குவோம்.

உர்வாருகம் இவ பந்தனாத் ம்ருத்யோர் முக்ஷீய மா அம்ருதாத்

தெரிந்த வரிகள். வெள்ளரிப்பழத்தைப் போல பந்தங்களிலிருந்து விடுபடுவோமாக. என்னைச் சாவிலிருந்து காப்பாற்று. ஆனால் சாஸ்வத நிலையிலிருந்து வழுவாமலிருக்கச் செய் என்பது

இதன் பொருள். ஆழமான வரிகள். வேதாந்திகளுக்கும் சம்சாரிகளுக்கும் ஒருங்கே சிலிர்ப்பூட்டும் கருத்து.

சாதாரண சீவன் தேகாத்ம விகாரத்தால், மரணமற்ற வாழ்வே உயர்ந்தது எனக் கருதுவான். அவனுக்கு நீண்ட ஆயுளே மிகப் பெரிய பேறு. இந்த மந்திரம் வேள்விகளிலும் வீட்டில் நடக்கும் வழிபாடுகளிலும், நீண்ட காலம் வாழும் பேற்றினை உத்தேசித்தே ஓதப்படுகிறது.

ஆனால் வேதாந்திகள் பற்றற்ற வாழ்வினையே பிறவிப்பயனாகக் கருதுவார்கள். முற்றிய வெள்ளரிப் பழம் தானாகவே செடியிலிருந்து வெளிவந்துவிடுகிறது. அதைப்போல என்னைப் பந்தங்களிலிருந்து வெளியேற அருள் செய், என்பது பிரர்த்தனை. இது முதல் பகுதி. இந்நிலையில் மனம் கட்டுப் பட்டதாகிறது. அதன் பின்வரும் நிலை என்ன? இதுவே ரமணர் அடிக்கடி வற்புறுத்தும் ஞான விசாரம்.

மரணத்திலிருந்து அல்லது அழிவிலிருந்து விடுதலை கொடு; அம்ருதத்தை அளி. இதன் பொருள் விசாலமானது. பற்றிலிருந்து விடுபட்ட பின் ஜீவன் இந்த உடலைப் பற்ற்றிய சிந்தனையை விடுகிறான். அதற்கு அடுத்த நிலையில் அவன் பிரம்ம நாட்டத்தில் அமைகிறான். அதனால் இந்த வெள்ளரிப் பழ உவமை, அவனுக்கு முமுக்ஷுத்வம் என்னும் பேற்றை பெறும் நிலையை உணர்த்துகிறது. பற்றற்ற அவனுக்கு சிற்றின்பமே மரணம்; பேரின்பமே அமரத்துவம். அவன் மனதை ஒருமுகப் படுத்தி பரமனையே காணுகின்றான். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துகிறான். ரமண பகவான் ஒரு பசுவினிடத்தில் காட்டிய பேரன்பு பிரசித்தமானது. அப்பசுவிற்குக் குறிப்பிட்ட நாளை அர்ப்பணித்துக் கொண்டாடுகிறோம். அவருடைய வேறு அன்பர்கள் எவருக்கும் கிட்டாத பேறு அந்த விலங்கினத்திற்குக் கிட்டியது! ராமாயணத்தில்

*குரங்காகிய அனுமனுக்கே மிகச் சிறந்த பக்தன் என்னும் அங்கீகாரம் கிடைத்தது. அதுமட்டுமன்றி ஜடாயு என்னும் கழுகிற்கும் மோட்சம் அளிக்கிறார். அரக்கனான வீபீடணனுக்கும் வேடனாகிய குகனுக்கும் நட்பு வாயிலைத் திறக்கிறார் ராமபிரான்.*

*பற்றற்ற நிலை என்பது உலகத்தை வெறுத்து ஒதுக்குவது என்ற எண்ணம் பலருக்கு உண்டு. ரமண சபையில் இது ஏற்கப்படுவது இல்லை. அங்கு குரங்கும் காக்கையும் பசுவும் மனிதர்களுடன் சேர்ந்து அவர் பேரன்பைப் பெற்றன. உலகியல் வாழ்க்கையில் இளம் வயதினிலேயே பற்றைத் துறந்த பகவான் மலரைக் கல்லாக ஆக்கிக் கொள்ளவில்லை. அதை மலரச் செய்தார். விகசித்த அவ்வுள்ளத்தில் வெறுப்புக்கோ வேற்றுமைக்கோ இடமில்லாமல் போயிற்று. இதுவே கற்போல் மலராது இருந்தால் மௌனம் இது ஆமோ என்ற மணிமாலையாக வந்தது. ம்ருத்யோர் முக்ஷீய மா அம்ருதாத் என்னும் வேத நெறியும் இதையே சொல்லும்.*

*ஒரு வெளிநாட்டு பக்தை, தான் தியானம் செய்யும்போது கொசுக்கள் கடிக்கின்றன. அவற்றை விரட்டலாமா என்று வினவுகிறாள். அப்பொழுது ரமணர் அளித்த பதில் ஒரு சிறந்த தத்துவ விளக்கம்.*

*முக்தி கொசுக்களை விரட்டுவதையோ, அவற்றை விரட்டாமல் விடுவதையோ பொறுத்ததில்லை. நீ தியானத்தில் முழுவதுமாக ஆழ்ந்துவிட்டால் கொசுக்கள் உன்னைக் கடிப்பதே உனக்குத் தெரியாதே. ஆனால் அந்நிலைமை அடையும்வரை நீ கொசுக்களை விரட்டுவதில் தவறென்ன? (ரமணோதயம்-ஏப்ரல் 2004- ப. 13)*

*இது, வெளிவிவகாரங்களில் மனதைச் செலுத்தாமல், அதைக் கட்டுப்படுத்த முயலுவதே உண்மையான*

*தியானம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. 'இந்திரியங்களில் நான் மனமாக இருக்கின்றேன்' என்று கீதாசாரியன் கூறுவது நோக்கத் தக்கது. (இந்த்ரியாணாம் மனஸ்சாஸ்மி). இது மிகவும் கடினமான காரியம். மனத்தைக் குரங்குடன் ஒப்பிடுவார்கள். அது எந்தவித கட்டுக்கும் அடங்காமல் தன் போக்கிற்கு சஞ்சரிக்கும் இயல்புடையது. அதை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்துவதையே பகவான் உயர்ந்த தவமாகக் கொண்டார்.*

*இந்நிலை படிப்பினாலோ பாண்டித்தியத்தாலோ கூடுவதன்று. இறைவனின் தத்துவத்தை மிக அழகாக விளக்கும் திருவண்டப்பகுதியில், மாணிக்கவாசகர், நூலறிவால் அவனை அடைய இயலாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.*

*அரியதில் அரிய அரியோன் காண்க*
*மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க*
*நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க*

*(திருவண்டப்பகுதி 47-49)*

*இதை ஆதிசங்கர பகவத்பாதர் அவர்கள் பஜகோவிந்தத்தில் ஆணித்தரமாக சொல்லுகிறார். பிக்ஷையெடுத்துக் கிடைக்கும் எளிய உணவை உண்டு, தகிக்கும் சூரியனின் கிரணங்கள் வறுத்தெடுக்கும் வெட்ட வெளியில் கட்டுப்பாட்டுடன் வாழும் சன்யாசிக்கும் கூட ஆசைகளைத் துறப்பது கடினம். (ததபி ந முஞ்சதி ஆசாபாச:). நூல் அறிவும் ஆசாரங்களும் போற்றத் தக்கவை; ஆனால் அவை மட்டுமே முக்தி நிலைக்கு அழைத்துச் செல்லாது என்பதே சங்கரரும் மணிவாசகரும் உணர்த்தும் மேலான தத்துவம்.*

*பத்ரகிரியார் என்கிற சித்தர் அரச பரம்பரையில் வந்தவர். ஒருமுறை அவர்தம் அரண்மனையில் கள்ளர் சிலர் புகுந்து ஆபரணங்களைக் கவர்ந்து சென்றனர்.*

காவலர் அவர்களைத் துரத்த, அவர்களில் ஒருவன் ஒரு ஆபரணத்தை, அங்குத் தவத்தில் ஆழ்ந்திருந்த பட்டினத்தாரின் மேல் எறிந்து விட்டு ஓடி விடுகிறான். அதை அறியாத காவலர் அவரே அந்தத் திருட்டைச் செய்தார் என்று குற்றம் சாட்டி அரசவைக்கு இழுத்துச் செல்லுகின்றனர். அரசனாகிய பத்ரகிரியார் அவரைக் கழுவிலேற்ற ஆணையிடுகிறார். ஆனால் அந்தக் கழுமரம் பற்றி எரிய, மன்னன் பட்டினத்தாரின் பெருமையை உணர்கிறார். அவரின் வழியினில் நிற்கத் தலைப்படுகிறார். அவர் எளிய சொற்களால் தத்துவ விளக்கம் அளிப்பதில் சிறந்தவர். உருவற்ற ஆத்மாவை உணராதவர்களைப் பாவிகள் என்று அழைக்கிறார். சூத்திரம் என்னும் சொல்லுக்கு இரு பொருள்கள் உண்டு. சுருக்கமான விளக்கம் என்பது ஒன்று. ஆத்மா வேறு, சரீரம் - மனம் - புத்தி என்பவை வேறு என்னும் அறிவே ஆத்ம ஞானம். இதை அறிந்தவன் புண்ணியன், மற்றோரெல்லாம் பாவிகள் என்பது ஒரு பொருள். சூத்திரம் என்னும் சொல் ஆடைகளை நெய்ய, கிழிசலைத் தைக்க உதவும் நூல் என்னும் பொருளையும் தரும். ஆத்ம ஞானம் என்னும் சூத்திரம் நம் வாழ்வின் ஓட்டைகளைத் தெய்த்து நல்ல உடையாக்கி நம் மீது போர்த்துகிறது. இந்த உடையே நைந்து போனால் அதை நீக்கி வேறு உடையை அணிந்து கொள்கிறது. இந்த இடைப்பட்ட காலமே நம் வாழ்வு. பொய்மையும் பூசலும் ஆசாபாசங்களும் சூழ்ந்த இவ்வாழ்வில் இறைத்தத்துவத்தை அறியாமல் நாம் பாவிகளாக வாழ்ந்து நரகத்து வாயிலைத் திறந்து வைத்துக்கொள்ள படாத பாடு படுகிறோம்.

*பாவி என்ற பேர் படைத்துப் பாழ் நரகில் வீழாமல்*
*ஆவி என்ற சூத்திரத்தை அறிவது இனி எக்காலம்?*

மெய்ஞ்ஞானப் புலம்பல் - *15*

பகவான் ரமணர் அருளிய கருத்தும் இதுவே. தேகாத்ம விசாரம் ஒன்றே மெய்ப்பொருளின்பால்

*நம்மை அழைத்துச் செல்லும். மற்றயவை மீண்டும் மீண்டும் பாச வலையில் நம்மைத் தள்ளும். திருமூலர் இதையே வலியுறுத்துகிறார்.*

*வேடம் கடந்து விகிர்தன்தன் பால்மேவி*
*ஆடம்பர மின்றி ஆசாபாசம் செற்றுப்*
*பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்*
*சாடும் சிவபோதகர் சுத்த சைவரே (1438)*

*ஞானியருக்கு வேடங்கள் தேவையில்லை. புறச்சின்னங்களை அவர்கள் ஒதுக்குகின்றனர். பசித்தபோதெல்லாம் புசித்து, வியர்த்தபோது மட்டுமே குளித்தவர்க்கும் பரமபதம் கிடைக்கப் பெறும், அவர் மனம் சிவன்பால் லயித்துவிட்டால்.*

*இந்த மனத்தின் கேண்மையே சாமானியனை சான்றோனாக ஆக்குகிறது. இதற்கான அழகிய எளியதோர் விளக்கம் மஹாபாரதத்தில் கிடைக்கிறது. யக்ஷன் தருமனிடம் கேட்கின்றான், அரசனே, ஞானம் என்பது எது? எது அமைதி எனப்படும்? தயையும் நேர்மையும் யாவை?. தருமன் மிகவும் சுருக்கமாக விடையளிக்கிறான். தத்துவார்த்தின் உண்மைப் பொருளே ஞானம். மனதின் அடக்கமே அமைதி. அனைத்துப் படைப்புகளுக்கும் நன்மையை நாடுவதே தயையாகும். அனைவரிடமும் சமத்துவ நிலையே நேர்மை.*

*ஞானம் தத்வார்த்த சம்போத: ஸம: சித்தப்ரசாந்ததா*
*தயா ஸ்ர்வசுகைஷித்வம் ஆர்ஜவம் சமசித்ததா*

*இந்த நான்கு குணங்களும் ஒரு சான்றோனின் அடையாளமாகும். ஞானமும் அமைதியுமே அவனுக்கு அணிகலன்கள். 'தத்வார்த்த சம்போதம்' என்பது உணர்வு பூர்வமான நிலை. இது கேவலம் படிப்பாலோ, ஆராய்ச்சியாலோ மட்டும் கிடைக்கக் கூடியதல்ல. அத்தகைய அறிவு விவாதங்களில் வெற்றி பெற உதவுமேயன்றி மெய்ப்பொருளை அடைய வழி*

*காட்டாது. இந்த மெய்ப்பொருளே பேரின்பமாகும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற குறளின் வாக்கும் இந்த 'சம்போத'மும் ஆழ்ந்து நோக்கத் தக்கவை. படிப்பு மனிதனை உயர்த்தக்கூடியது. ஆனால் அது வெறும் ஏட்டுச் சுரைக்காயாக ஆகிவிட்டால், அவன் யயாதியைப் போல, துரியோதனனைப் போல துர்விஷயங்களில் தன் மனதைச் செலுத்துவான் ஆவான்.*

*விதுர நீதி என்பது மகாபாரதத்தில் உள்ள சிறந்த பகுதி. அது பகவத் கீதையைப் போலவே உயர்ந்த நீதியைப் போதிப்பது. அறிவிழந்த திருதராஷ்டிர மன்னனுக்கு ஞானியான விதுரனின் நல்லுரையே இந்நூலின் நோக்கம். அதில் விதுரன் சொல்லுவான்:*

*நல்லொழுக்கமே, மனிதனுக்குப் பிரதானமான குணம். அதனை இழந்தவன், பொருளுடையவனாகவோ, உற்றமும் சுற்றமும் சூழ்ந்தவனாகவோ இருப்பினும் பயனற்ற வாழ்வினையே வாழ்கிறான். (2.48)*

*மகனிடம் கொண்ட மட்டற்ற வாத்சல்யத்தால், மதியிழந்த மன்னன் காதில் விதுரன் போதித்த நல்லுரைகள் ஏறுவதில்லை. 'மோஹாந்தா நைவ பஸ்யந்தி' என்னும் கருத்திற்கேற்ப மோக வலையில் சிக்கிய அவன் தனக்கு உபதேசிக்கப் பட்ட மெய்ப் பொருளை உணர மறுக்கிறான். அது மட்டுமல்ல, தன் மகனுக்கு நல்லதோர் வாழ்வினையும் முன்கூட்டியே திட்டமிட்டு தீவினையிலிருந்து திருப்பவும் இயலாதவனாகின்றான்.*

*புதுமை என்னும் சூறாவளிக் காற்றில் பழம் பெருமைகளை இழந்து தவிக்கும் சூழலில் இருக்கும் இக்காலப் பெற்றோருக்கும் இது பொருந்தும்.*

*துரியோதனன் சாத்திரங்களைப் படித்தவன். சிறந்த நிர்வாகி. அவன் ஆளுமையை கிராதார்ஜுனீயம்*

என்னும் நூலின் ஆரம்ப பாகத்தில் பாரவி என்கிற மகாகவி விளக்குகிறான்.

வசூனிவாஞ்சன்ன வஸீ ந மன்யுனா
ஸ்வதர்ம இத்யேவ நிவ்ருத்த காரண:
குருபதிஷ்டேன ரிபௌ சுதேபிவா
நிஹந்தி தண்டேன ஸ தர்மவிப்லவம் (1: 13)

செல்வத்திற்கும் கோபத்திற்கும் வசப்படாதவனாக, தர்மத்திற்குக் கட்டுப்பட்டவனாக, தன்னிலை இழக்காமல், அவன் நண்பன், எதிரி என்று நோக்காமல் நீதி சாத்திர அறிஞர்கள் கருத்துப்படி அவன் தண்டனை வழங்கினான்.

ஆனால், இத்துணை சிறந்த மன்னனாக விளங்கிய அவன் ரஜோ குணத்தினால் பீடிக்கப் பட்டு பேராசை என்னும் வலையில் வீழ்ந்தான். அவன் தந்தையாகிற திருதராஷ்டிர மன்னனும் பலரிடமும் உபதேசங்களைப் பெறுகிறான். அவன் சபையில் சான்றோர் பலர் இருந்தனர். இருப்பினும் முன்பு குறிப்பிட்ட 'மோஹாந்தா நைவ பஸ்யந்தி' என்னும் வரிகளுக்கேற்ப, தமோ குணத்தின் பாற்பட்டு அறிவு குழம்பியவர்கள் தமக்கு எது நன்மை பயக்கும் என்னும் பாதையைப் பார்க்கத் தவறியவர்களாகி விடுகிறார்கள். ரஜோ குணம் மகனையும் தமோ குணம் தந்தையையும் வீழ்த்தியது மகாபாரதம் காட்டும் அறிவுரை.

நாமும் தமஸ்-ரஜஸ் என்னும் குணங்களின் கலவையாக இருக்கின்றோம். இவை வலிமை வாய்ந்தவை. துன்பம் தருபவை. இவைகளிலிருந்து மீள அக்ஷர மணி மாலையில் ரமணர் காட்டும் பாதையே 'மலர்ந்த மௌன' நிலை. இந்நிலையில் வெறுப்பு நீங்கி அமைதியும் பற்று நீங்கிப் பரவசமும் கிட்டுகிறது. இதை அடையப்பெற்றோர் துன்பக் கடலை எளிதில் தாண்டி விடுகின்றனர்.

# தன்னெஞ்சு அறிவது பொய்யற்க

## ராம் மோஹுறன்

பல்லாயிரம் ஆண்டுகட்குப் பின்னர், தாம் இயற்றிய உலகப் பொதுமறையாகிய திருக்குறளை அனைவரும் பயில்கிறார்களா என்று அறிய மீண்டும் உடல்தாங்கி வந்தார் திருவள்ளுவர். முதலாவதாக தமிழ்கூறும் நல்லுலகின் தலைநகராகிய சென்னைக்கு வந்தார். தெருவில் வந்தவர்களிடம் நெருங்கி திருக்குறள் படிக்கிறீர்களா என்று வினவினார். சிலர் 'அப்படியா? என்ன அது?' என்று வினவினார்கள். மற்றும் சிலர், 'இந்த அவசர யுகத்தில் உட்கார்ந்து படிக்க நேரம் ஏது? ஏதோ வாரக் கடைசியில் இசைக்கவி ரமணன் தொலைக்காட்சியில் கூறுவதை பதினைந்து நிமிடம் கேட்கிறோம், அதுவும் அவர் சுவைபடக் கூறுவதால். அவ்வளவே! ஏதோ ஒன்று இரண்டு என்றால் படிக்கலாம். ஆயிரத்துக்கு மேற்பட்ட குறட்பாக்களைப் படிக்க யாருக்கு நேரம் இருக்கிறது? என்றனர்.

இவர்கள் சலித்துக் கொள்வதைக் கேட்ட வள்ளுவர் நாமே நேரில்போய் இந்தப் பிரசித்தி பெற்ற டி.வி. நிலையம் ஒன்றில் போய்ப் பேசலாமே? என்று ஒரு டி.வி. நிலையத்தில் நுழைந்தார். அங்கிருந்த அலுவலர் "யாரையா நீர்? தாடியும் மீசையுமாய் அநாகரிகத் தோற்றத்துடன் உள்ளே வருகிறீர்?" என்று வினவினார். உடனே வள்ளுவர் "நான்தான் திருக்குறள் ஆசிரியர் திருவள்ளுவன். மீண்டும் திருக்குறளைப் பரப்ப முயற்சி செய்யலாம் என்று வந்துள்ளேன்" என்றார். முதலில் நம்பாத அலுவலர், பின்னர், வள்ளுவர் அத்தனைக் குறட்பாக்களின் சாரத்தையும் எடுத்துரைத்த பின்னர் தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டார்.

“சரி, அப்போது நாளையிலிருந்து காலையில் ஒருமணி நேரம் டி.வி.யில் பேசலாமா?” என்று வள்ளுவர் கேட்டார். “ஐயையோ! தினம் ஒருமணி நேரமா? இருக்கின்ற நேரத்தையெல்லாம் ஒரு நொடிவிடாமல் விளம்பரம் மூலம் வருவானம் தருகின்ற நெடுந்தொடர்கட்கும் திரைப் படங்களுக்கும் கொடுத்துவிட்டோம். உங்கட்கு ஒருமணி நேரம் ஒதுக்கினால் கோடிக்கணக்கான வருமானம் இழக்கப்படும்.போகட்டும், நீங்கள் இவ்வளவு கேட்பதனால் ஒரே ஒரு குறள் மட்டும் சொல்ல நேரம் தருகிறோம். அந்த ஒருகுறளும், அத்தனை திருக்குறப்பாக்களுக்கும் சாரமாக, முக்கியமான அறிவுரையாக இருக்கவேண்டும்” என்றார்.

அதைக்கேட்ட வள்ளுவர், “சரி! அப்படியே செய்கிறேன். எந்த ஒரு திருக்குறளைப் பயின்றால், வேறு எந்த சம்ஸ்காரமும் தேவையில்லையோ அந்தத் திருக்குறளைப் பற்றியே நாளை பேசுகிறேன்” என்றார்.

மறுநாள் திருவள்ளுவர் எடுத்துரைத்த குறள் எது தெரியுமா? எதைப் பின்பற்றினால் வேறுஎதுவும் தேவையில்லையோ, எதைப் பின்பற்றினால் மற்ற எல்லா அறங்களும் தாமே வந்து பின்தொடருமோ, அந்தத் திருக்குறளைப் பற்றிக் கூறினார் அவர். அந்தத் திருக்குறளாவது:

“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.”

எல்லாப் பாவங்களுக்கும், எல்லா வழிதவறுதல்கட்கும் மூலகாரணம் அசத்யம், அதாவது பொய். அதை எவன் விடுகிறானோ, அப்போது எல்லாத் தீயபண்புகளும் அவனை விட்டுத் தாமாகவே நீங்கி விடுகின்றன. இதற்கு உரை எழுதுகையில் பரிமேலழகரும் இதே கருத்தை வலியுறுத்துகிறார். “எல்லாவிதமான அறங்கொண்டு செய்தல்

கடினமாதலின் அவை எல்லாவற்றின் பயனையும் தானே தரவல்லது பொய்யாமை. அதனையே மேற்கொண்டு தவறாமல் செய்தல் நன்று” என்பது பரிமேலழகர் உரை. இதை விளக்கும்படியான ஒருகதை பஞ்ச தந்திரத்தில் வருகிறது.

ஓர் ஊரில் ஒரு மிகப்பெரிய திருடன் இருந்தான். அவன் ஒரு மலைக்குகையில் இருந்துகொண்டு, சென்ற ஊரில் எல்லாம் திருடி வருவான். அவனுக்கு அறிவுரை சொல்லி அலுத்துப்போன அவன் அம்மா, அவனை விடுத்துக் கிராமத்திலேயே தங்கி விட்டார். திருடன் மலைக்குகையில் தங்கி கொள்ளைத் தொழிலை நடத்தி வந்தான். அவனை யாராலும் பிடிக்க முடியவில்லை.

அவன் தாயாருக்கு இறுதிக்காலம் நெருங்கியது. என் பிள்ளையைக் காணவேண்டும்போல் இருக்கிறது. எப்படியாவது அவனை அழைத்து வாருங்கள்! என்றார்.

திருடனை எப்படிக் கண்டுபிடிப்பது? ஊர்களில் இருந்த எல்லாத் திருடர்கட்கும் சொல்லி, எப்படியோ செய்தியை அவன் காதில் போட்டு விட்டார்கள்.

திருடனாய் இருந்தாலும் தாய்ப்பாசம் விடுமா? ஓடிஓடி வந்து அம்மாவைப் பார்க்கிறான் திருடன். அதேசமயம் அம்மா இறுதிக்காலத்தில் “நீ திருட்டுத் தொழிலை விட்டுவிட வேண்டும்” என்று உறுதிமொழி வாங்கிக் கொள்வாரோ என்று அச்சத்துடன் வந்தான். அம்மா அவனைப் பார்த்தவுடன் “வா! வா! நீ ஒரு சாமர்த்தியமான திருடன் என்று பெயர் எடுத்து உள்ளாய். நீ இந்தப் பிராந்தியத்திலேயே மிகப்பெரிய திருடன் என்று பெயர் வாங்கினால் என் ஆன்மா சாந்தி அடையும்” என்றாள். தாயார் தன்னைக் கண்டிப்பார் என்று எண்ணி அஞ்சிய திருடனுக்கு அம்மாவின் எதிர்பார்ப்பு மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சந்தோஷத்துடன் திருடன் “சரி” என்று

ஒப்புக்கொண்டான். அம்மா, "அதுமட்டுமல்ல! என் பிராணன் போகும் சமயத்தில் எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுப்பாயா?" என்று கேட்டாள். அம்மாதான் தன்னைப் பெரிய திருடனாகச் சொல்லி விட்டாரே! வேறு என்ன கேட்கப் போகிறார்? என்று எண்ணிய திருடன், "என்ன சத்யம் வேண்டுமானாலும் செய்கிறேன்" என்றான். "எந்த நிலையிலும், உயிர் போவதாய் இருந்தாலும் சரி, நான் பொய் சொல்ல மாட்டேன் என்று சத்யம்செய்" என்று கூறினார். "அப்படியே அம்மா. என்ன நேர்ந்தாலும் சரி, பொய்யே சொல்ல மாட்டேன்" என்றான். சிறிது நேரத்தில் அம்மாவும் தன் உயிரை விட்டுவிட்டார்.

பின்னர் அம்மாவே பெரிய திருட்டாய் செய்யச் சொல்லி விட்டார். எனவே இனி அரசரின் கஜானாவில்தான் சென்று திருடவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, கஜானாவை நோக்கிக் குதிரையில் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு குதிரைமீது, கறுப்புப் போர்வை போர்த்திக்கொண்டு ஒருவன் எதிர்ப்பட்டான். "நீ எங்கே இந்த இருளில் சென்றுகொண்டு இருக்கிறாய்" என்று கேட்டான். திருடன் இனிமேல் பொய்யே சொல்லமாட்டேன் என்று சத்யம் செய்து இருக்கிறானே! எனவே "அரசரின் கஜானாவில் திருடப் போகிறேன்" என்றான்.

எதிரில் வந்தவன், "அரசரின் கஜானாவுக்கு உள்ளே செல்லும் வழி தெரியுமா உனக்கு? நானும் அந்த நோக்கத்துடன்தான் வந்து கொண்டிருக்கிறேன். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து செல்லலாமா?" என்று வேண்டினான்.

"ஆஹா! நாம் ஒன்றாகவே சேர்ந்து போகலாம். நாம் எதைத் திருடுகிறோமோ, அதில் சரிபாதி உனக்கு" என்று ஒப்பந்தம் செய்து கொண்டான் திருடன். இருவரும் இருளில் அரண்மனையில் சாமர்த்தியமாக எல்லாப்

பூட்டுகளையும் உடைத்துக்கொண்டு நுழைந்தனர். கஜானாவை நெருங்கியபின், தனது கூட்டாளியைக் காவலுக்கு நிற்க வைத்துத் திருடன் உள்ளே நுழைந்தான்.

அங்கே பிரதானமாக ஒரு அழகிய பெட்டி இருந்தது. அதை உடைத்துத் திறந்தான் திருடன். உள்ளே விலைமதிப்பற்ற மூன்று மிக உயர்ந்த ரத்தினங்கள் இருந்தன. அந்த ஒப்புயர்வற்ற ரத்தினங்களை அவன் கையில் எடுத்தவுடன் அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. “தனது சகாவுக்கு சரிபாதி கொடுப்பதாகக் கூறியுள்ளேன் அல்லவா? மூன்றில் சரிபாதி எப்படி வரும்? மூன்றாவது ரத்தினத்தைப் பாதியாய் உடைக்க முடியாதே?” என்று எண்ணி மூன்றில் இரண்டை எடுத்துக்கொண்டு, மூன்றாவதைப் பெட்டியிலேயே வைத்துவிட்டு வெளியே வந்தான். ஒரு ரத்தினத்தைக் காவல் காத்துக்கொண்டு இருந்த தன் சகாவிடம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து சென்றான்.

மறுநாள் அரண்மனையில் பெரும் குழப்பம். கஜானாவின் பூட்டு உடைக்கப்பட்டதுகண்டு, காவலர்கள் அரசரிடம் தெரிவித்தனர். அரசன் தன் மந்திரியிடம் கஜானாவில் என்ன களவு போய் உள்ளது என்பதைக் கண்டு வரச் சொன்னான்.

மந்திரியும் கஜானாவுள் தனியே சென்றான். உள்ளே விலைமதிப்பற்ற ரத்தினங்கள் இருந்த பெட்டி திறந்து கிடந்தது. “முட்டாள் திருடன்! மூன்று ரத்தினங்களுள் ஒன்றைப் பெட்டியிலேயே மறதியாய் விட்டுச் சென்றுவிட்டான். நல்லவேளை, இதை வேறு யாரும் பார்க்கவில்லை. நான் மூன்றாவது ரத்தினத்தை எடுத்து வைத்துக்கொண்டு, ‘மூன்றும் களவு போய்விட்டது’ என்று கூறப்போகிறேன். அரசனும் இதை நம்பத்தான் வேண்டும்” என்று எண்ணி மூன்றாவது ரத்தினத்தை எடுத்து மறைத்து வைத்துக்கொண்டான். பின்னர்

அரசனிடம் சென்று, "அரசே! பரம்பரை பரம்பரையாய் நம் குல தனமாய் இருந்த ரத்தினங்கள் மூன்றும் களவாடப்பட்டு விட்டன" என்றான். அரசனும் படைகளுக்கு விவரம் சொல்லித் திருடனைத் தேடச் செய்தான்.

இறுதியில் சந்தேகத்துக்கு இடம்வைத்த சிலரைக் கைது செய்து வந்தனர். "இந்த ரத்தினங்களைத் திருடினாயா?" என்ற கேள்விக்கு "ஆமாம்" என்று ஒத்துக்கொண்டான் திருடன். அவன்தான் அம்மாவிற்குச் சத்யம் செய்து கொடுத்து உள்ளானே! எனவே உண்மையைக் கூறினான். அப்படியா! நீ மட்டும்தான் திருடினாயா? வேறு யாரும் கூட்டாளி உண்டா? இருந்தால் அவன் அங்க அடையாளங்களைக் கூறுவாய்" என்று அரசன் கேட்டான்.

திருடன் "என்னுடன் இன்னொருவனும் வந்தான். அவன் வெளியே காவல் இருக்க, நான் கஜானாவின் உள்ளேபோய் மூன்று ரத்தினங்களைக் கண்டு அவற்றில் இரண்டை மட்டும் எடுத்துக்கொண்டு வந்தேன். ஒன்றை அவனிடம் கொடுத்து ஒன்றை நான் வைத்துக் கொண்டேன். மூன்றாவது ரத்தினம் பெட்டியிலேயே உள்ளதே" என்றுகூறி, தன் கூட்டாளியின் அங்க அடையாளங்களைக் கூறினான்.

உடன் அரசன் உள்ளே போய்விட்டான். சிறிது நேரத்தில் கறுப்புப் போர்வையுடன் வெளிவந்தவனைப் பார்த்து, திருடன், "இவன்தான்! இவன்தான் என் கூட்டாளி" என்று பிடித்துக்கொண்டான்.

அந்தக் கறுப்புப் போர்வையைக் கழற்றிப் பார்த்தால் உள்ளே இருந்து அரசன் வெளிப்படுகிறான். இரவில் நகர் சோதனைக்காக மாறுவேடத்தில் கறுப்புப் போர்வையுடன் வந்த அரசன் திருடனை வழியில் பார்த்து, தன் கஜானாவைக் கையாட அவனே திருடனுக்கு உதவி செய்திருக்கிறான்! எனவே

அரசனுக்குத் திருடன் எடுத்து வந்தது இரண்டு ரத்தினங்கள்தான் என்று தெரியும். தன்னிடம் இருந்த ரத்திரனத்தை அரசன் எடுத்துக்கொடுக்க, திருடனும் தன்னிடம் இருந்த ரத்தினத்தை எடுத்துக் கொடுத்தான்.

மூன்றாவது ரத்தினத்தைத் திருடியவன் எங்கே? மந்திரி என்பது அரசனுக்குத் தெரியுமல்லவா? உடனே மந்திரியைப் பிடித்து நிறுத்தி, "சமயம் கிடைக்கும்போது, ஆசை பற்றிக்கொள்ளும்போது எல்லோரும் திருடர் ஆகிறார்கள்! என்றான். மந்திரி சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, சத்யத்தை எந்நிலையிலும் கைவிடாத அத்திருடனையே அரசன் மந்திரியாக்கி விட்டான்.

அந்தத் திருடனுடைய அம்மாவுக்குத்தான் எவ்வளவு கூரிய அறிவு! திருடனை மந்திரியாக உயர்த்தியது "சத்யத்தையே கைப்பிடி" என்ற அவருடைய அறிவுரை அல்லவா? "திருட்டுத் தொழிலை விட்டுவிடு" என்று அன்னை கேட்டுக்கொண்டு இருந்தால், அதை அவன் விட மறுத்து இருப்பான். "திருடு! ஆனால் பொய் சொல்லாதே!" என்று அவர் சத்யம் வாங்கிக்கொண்டது எல்லாத் தீமைகளிலிருந்தும் விலக்கி அவனை எவ்வளவு உயர்த்தி விட்டது! பெரிய விரதம் பொய்யாமையே.

சத்யமே மிகப்பெரிய தர்மம். எனவேதான் ஆண்டாளும் "தீக்குறளை சென்று ஓதோம்" பொய்யான, வீணான பேச்சுக்களைப் பேசமாட்டோம் என்று அறிவுறுத்துகிறார்.

வைணவத்தில் 'சித்தோபாயம்', 'சாத்யோபாயம்' என்று கூறுவார்கள். சித்தோபாயம் என்பது சத்யத்தைப் பற்றி பரமனையே சரணடைவது. சாத்யோபாயம் என்பது பக்தி, கர்ம, யோகாப்பாச வழிகள். 'சித்தோபாயம்' என்பது நேராக பரமனே சத்யம்; அந்த சத்யத்தை விடாமல் பின்பற்றுவேன் என்பது.

'சாத்யோபாயம்' என்பது வேறு வழிகளைப் பற்றி இறைவனிடம் அடையும் சுற்றுவழி. சித்தோபாயமோ பகவான் கூறும் நேர்வழி.

நாம் சட்டை தைக்கும்போது, துணிக்கடையில் போய் துணியை அளந்து வாங்கிவந்து தையற்காரனிடம் அளவு கொடுத்துத் தைக்கச் சொல்லலாம். பின்னர் தைத்த சட்டையைப் போட்டுக் கொள்ளலாம். அதாவது முதலில் இன்னொன்றைப் பற்றி பின்னர் நமது குறிக்கோளைப் பற்றுதல். இது சாத்யோபாயம்.

அதற்குப் பதிலாக ரெடிமேட் கடைக்குச் சென்று, நமக்குப் பொருத்தமான சட்டையை உடனே வாங்கிப் போட்டுக் கொள்ளலாம். இதுவே சித்தோபாயம். நேராக பரம்பொருளை அடைவதே பகவான் காட்டும் வழி. அதுவே 'சித்தோ'பாயம். "நான் ஆத்மாவே அன்றி உடல்-மனக்கூட்டு அல்ல" என்ற சத்யத்தை உள்வாங்கி அதையே குறித்து விசாரம் செய்தால் நேராக பரம்பொருளில் கரையலாம். இதுவே பகவானின் நேர்வழி.

ஸ்வாமி சின்மயாநந்தர் கூறுவார்: ஒரு டிரெயினில் நாம் எண்ணும் இடத்துக்குச் செல்ல வேண்டுமெனில், எல்லாப் பெட்டிகளிலும் எல்லா பெர்த்துகளிலும் போகவேண்டியது இல்லை. நம்முடையதான ஒரே ஒரு பெட்டியில், பெர்த்தில் சரியாக அமர்ந்து பயணித்தால் போதும். நமது குறிக்கோளை அடையலாம். அதேபோன்று பரம்பொருளை அடைய எல்லா யோகங்களையும் பின்பற்ற வேண்டியதில்லை. சத்யம் என்ற ஒரே ஒரு பெர்த்தில் அமர்ந்தால் போதும். அத்துடன் சிரத்தை, பக்தி, யோகம் போன்ற எல்லா காரணிகளும், டிரெயினில் இணைக்கப்பட்ட மற்ற பெட்டிகள்போல் நம்முடன் குறிக்கோளில் வந்து சேரும்" என்று விளக்கினார்.

பகவான் காட்டும் நேர்வழி 'நானே ஆத்மா' என்ற பரம சத்ய வழியைப் பின்பற்றுவோமாக!

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### அருணை விஜய விழா மற்றும் முருகனார் ஆராதனை தினம் (1-9-2016)

*1896ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று அருணைக்கு விஜயம் புரிந்த ஸ்ரீபகவான் அதன்பின்னர் தனது வாழ்நாளில் எங்கும் வெளியே செல்லவில்லை. அத்தினம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 'அருணை விஜய விழா' வாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது. விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் மதுரை ரமண மந்திர அன்பர்கள் சுமார் 60பேர் ஆச்ரமம் வந்து சிறப்புப் பாராயணம், அண்ணாமலை வலம் மற்றும் அண்ணாமலை திருக்கோயிலில் அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். ஆச்ரமம் சார்பாக அண்ணாமலையார் திருக்கோயிலில் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.*

*இவ்வாண்டு இதே நன்னாளில் முருகனார் ஆராதனை தினமும் அமைந்தது சிறப்பு. முருகனார் ஆராதனையையொட்டி ஸ்ரீரமணாச்ரம முருகனார் சமாதியில் அபிஷேகம் நடைபெற்றது. முதல்நாள் துவங்கிய 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' முற்றோதல் இவ்விழா அன்று முடிவுற்றது. இவ்வைபவத்தில் ரமண அன்பர்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*

### பவளக்குன்று கும்பாபிஷேகம்

*பகவான் ஸ்ரீரமணர் திருவண்ணாமலைக்கு வந்த ஆரம்ப நாட்களில் மலைச்சாரலிலுள்ள பவளக்குன்றில் சிலகாலம் தங்கியிருந்தார். இங்குதான் அன்னை அழகம்மை தனது மகன் வேங்கடராமனை திருவண்ணாமலைக்கு வந்தபின் முதன்முதலில் சந்தித்தார்.*

*தற்பொழுது பவளக்குன்றின் கும்பாபிஷேகப் பணிகள் ஸ்ரீ ரமணாச்ரமத்தால் செய்யப்பட்டு வருகின்றன. நவம்பர் 7, 2016*

*திங்கட்கிழமை அன்று கும்பாபிஷேகம் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.*

# ரமண கேந்திரா செய்திகள்

## ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை

### கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

*ஒவ்வோராண்டும் ரமண கேந்திரம் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது என்பது அனைவரும் அறிந்ததே! இவ்வாண்டும் ஆகஸ்டு 21 ஞாயிறு அன்று மாலை சுமார் 25 கல்லூரி மற்றும் 50 பள்ளிகளைச் சார்ந்த 68 மாணவச் செல்வங்களுக்கு சுமார் ஒரு லட்சம் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.*

*இவ்விழாவில் ரமண கேந்திரத்தின் துணைத்தலைவரும், ரமணோதயத்தின் ஆசிரியருமான டாக்டர். ராம் மோஹன் அவர்கள் சிறப்புரை ஆற்ற திரு. காமேஷ்வர் அவர்கள் உதவித் தொகைகளை விநியோகித்தார்.*

## ரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

*ஆகஸ்டு மாதம் 27, 28, 29 தேதிகளில் நங்கைநல்லூர் இந்து காலனியில் அமைந்துள்ள வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் ஸ்ரீ ரமண சரண தீர்த்தர் நொச்சூர் வேங்கடராமன் அவர்கள் பகவானின் 'அப்பளப்பாட்டு' என்பதற்கான தத்துவ விளக்கத்தை பிரவசனம் செய்தார். திரளாக பக்தர்கள் கூடிப் பயன்பெற்றனர்.*

*செப்டம்பர் 1 அன்று மாலை நங்கைநல்லூரில் அமைந்துள்ள மாடர்ன் மேல்நிலைப்பள்ளியின் நிர்வாகம் மற்றும் மாணவர்கள் ரமண சத்சங்கத்தினரின் உதவியுடன் பகவான் ரமணரின் அருணை விஜய விழா ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுவதுபோல் இவ்வாண்டும் சிறப்பாகக் கொண்டாடினர். விழாவின் துவக்கத்தில் மாலை 4 மணிக்குப் பள்ளி மாணவர்கள் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். டாக்டர் A. கஜானன் ராவ்,*

KFI Foundation, Chennai *அவர்கள் கூடியிருந்த பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ரமண அன்பர்கள் முன்னிலையில் பகவான் ரமணர் மற்றும் தத்துவ ஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாழ்வின் சாரத்தை அனைவரும் பயன்பெறும் வகையில் சிறப்புரை ஆற்றினார்.*

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

*ஆகஸ்டு 26, 27 ஆகிய இருதினங்கள் பகவான் அருணை விஜய விழா மற்றும் முருகனாரின் ஆராதனை விழா கொண்டாடப்பட்டது. இவ்விரு நாட்களும் திரளாகக் கூடியிருந்த ரமண அன்பர்கள் முன்னிலையில் ஸ்ரீரமண தீர்த்தர் நொச்சூர் வேங்கடராமன் அவர்கள் பகவானின் அருணை விஜயத்தின் தத்துவத்தை விளக்கி பிரவசனம் செய்தார்.*

## முருகனார் மந்திரம், ராமநாதபுரம்

*ராமநாதபுரத்தில் அமைந்துள்ள முருகனார் மந்திரத்தில் முருகனாரின் ஆராதனை விழா ஆகஸ்டு 28 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கிய இவ்விழாவில் தாயுமானவர் தபோவன ஸ்வாமீஜீ பரானந்தர் தலைமை தாங்கினார். மதுரை ரமண மந்திரத்திலிருந்து வந்திருந்த ரமண அன்பர்கள் சிறப்புப் பாராயணம் செய்தனர். கூடியிருந்த சுமார் 250 அன்பர்களுக்கு அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ‘கர்மயோகி’ திரு. டி.வி. வேங்கடராமன்

*ரமண பக்தர்கள் மனத்திலே அச்சுப் பதித்ததுபோல் தமது நீண்ட சேவையால் நீங்காது இடம்பெற்றவர் ஸ்ரீரமணாச்ரமத்தின் அச்சகச் செம்மல் ஸ்ரீ டி.வி. வேங்கடராமன். 1929இல் பிறந்த அவர் தனது நீண்ட முழுமையான வாழ்நாளை ஆத்மிக சேவையிலேயே கழித்தவர். பௌதிகம் முதல் நாடகம்வரை பல்துறைச் செம்மலாக விளங்கிய இவர் தமது முழுநோக்கத்தையும் சீர்மையான அச்சகப் பணியிலேயே செலுத்தினார். அவர்*



தந்தையார் நடத்திவந்த ஜுபிடர் பிரஸ்ஸின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் அதை ஒரு சிறிய அளவிலிருந்து மிகப்பெரிதாக விஸ்தரித்தார். அவரது தீவிர ஈடுபாடும் அலையுறாத மனப்பாங்கும் அவருடைய ஒவ்வொரு செயலிலும் பிரதிபலித்தது. அச்சகத் தொழிலையே ஒரு ஆன்மிகம் சார்ந்த கர்மயோகமாக நடத்திவந்தார் திரு.வேங்கடராமன். துவக்கத்திலிருந்தே ஸ்ரீரமணாச்ரம நூல்களைப் பெரும்பாலும் பதிப்பித்து வந்தவர், ஆச்ரமத்திற்கு பொருளாதார நெருக்கடி இருந்த காலகட்டங்களில்கூட தனது வருவாய் குறித்து கவலையுறாது முழுமையான சேவை மனப்பான்மையுடன் ஆச்ரம நூல்களைப் பதிக்கும் சேவை செய்துகொண்டிருந்தார். ஸ்ரீ ரமணாச்ரமம் மட்டுமன்றி ஸ்ரீராமகிருஷ்ண மடம், ஸ்ரீ அரவிந்தாச்ரமம் போன்ற பல ஆன்மிக ஸ்தாபனங்களுக்கும் புத்தகங்களை அழகாகப் பதிப்பதின் மூலமாகப் பெரும்சேவை புரிந்தார். ஆரம்பம் முதலே பகவானின் தீவிர பக்தராக விளங்கிய வேங்கடராமன், பகவானின் மஹாநிர்வாண தினம் அன்றுகூட பகவானின் தரிசனம் பெற்றார். 52 ஆண்டுகளாக ஆன்மிகக் கொடுமுடியாக விளங்கிவரும் உயரிய ஆச்ரம சஞ்சிகையான 'மௌண்டன் பாத்' இதழ் தொடர்ந்து இங்ஙனம் விளங்கி வருவதற்கு திரு. வேங்கடராமனின் தொடர்ந்த சேவையும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

16 ஆண்டுகளுக்குமுன் நமது 'ரமணோதயம்' இதழ் துவங்குவதற்குத் தேவையான அடிப்படை வேலைகளுக்கு துணைநின்று அதன் முதற்பதிப்பு வெளிவர அவர் ஆற்றிய சேவை நினைவு கூரத்தக்கது.

கடந்த ஜூலை மாதம் 7ஆம் தேதியன்று தனது பூஜையறையில் வழுக்கி விழுந்த அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

ஒருவாரத்திற்குப்பின் ஜூலை 15ஆம் தேதியன்று உடல்நிலை சீர்கெட்டு, மாலை 6.30 மணியளவில் பகவான் பதமடைந்தார்.

அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு 'ரமணோதயம்' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# சரணாகதியில் தொடங்கி சரணாகதிவரை

## ஸ்ரீமதி. சுலோசனா நடராஜன்

திருமதி. சுலோசனா நடராஜன், ரமண மகரிஷி சென்டர் ஃபார் லர்னிங், பெங்களூரு அவர்கள் 23/8/2016 செவ்வாய்க்கிழமை அன்று பெங்களூரில் அவரது இல்லத்தில் அருணாசல ரமண பதமடைந்தார்.

தமது பன்னிரெண்டாம் வயதிலேயே - 1949 ஆம் ஆண்டு - பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளை நேரில் தரிசிக்கும் பாக்கியம்



பெற்றவர் ஸ்ரீமதி சுலோசனா நடராஜன். இவரது தகப்பனார் நீதிபதியான திரு. கே.எஸ். வேங்கடராமனும் பகவானது பக்தர் ஆவார். ஸ்ரீபகவான் சந்நிதியில் அசாத்தியமான அமைதி நிலவியதை சுலோசனாவால் அச்சிறுவயதிலேயே உணர முடிந்தது. ஸ்ரீபகவானது ஹாலில், பெற்றோருடன் அமர்ந்திருந்து கற்றுக்கொண்ட, ஸ்ரீமுருகன் பாடல்களை மனதிற்குள் பாராயணம் செய்வதும், கண்மூடி தியானத்திற்கு முயற்சிப்பதுமாக இருந்தவர், ஒருமுறை கண்விழித்துப் பார்த்தபோது, ஸ்ரீபகவானது அநுக்கிரகப் பார்வை தம்மீதே பதிந்திருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்தார்.

*ஸ்ரீமதி சுலோசனாவிற்கு 1952-ஆம் வருடம் பிப்ரவரி மாதம், வருமான வரி அலுவலரும், ரமண மகரிஷி சென்டர் ஃபார் லர்னிங் நிறுவனருமான திரு. ஏ.ஆர்.நடராஜனுடன் திருமணம் நடந்தேறியது. இவரது பாட்டனார், நீதிபதி ஏ.எஸ் கிருஷ்ணசாமி அய்யரும் ஸ்ரீரமண பக்தரேயாவார்.*

*பகவானது சீரிய அன்பரான மணவாசி ராமசாமி ஐயர் அவர்களின் 'சரணாகதி' பாடலே ஸ்ரீமதி சுலோசனா கற்றுக் கொண்ட முதல் பாடலாகும். டெல்லியில் இருந்தபோது பேராசிரியர் கே. சுவாமிநாதன் இவருக்கு 'ரமண சந்நிதிமுறை' புத்தகத்தைக் கொடுத்து, அதிலிருந்து பாடல்களைக் கற்கும்படி அறிவுறுத்தியது இவரது சங்கீத ஆர்வத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தது. அந்தப் புத்தகத்தை இவர் திறந்தபொழுது முதல் பாடலாக 'ரமண திருமந்திரம்' என்ற தலைப்பில் 'நமோ ரமணாயவே' என்று துவங்கும் பாடலைக் கண்டார். அதைத் தனது அடுத்த சத்சங்கத்திலேயே இசையமைத்துப் பாடவும் செய்தார். பின்னர் 'வைத்த பத்து' துவங்கி தொடர்ந்து பல நூறு பாடல்களுக்கு இசை அமைத்துப் பாட ஆரம்பித்தார். இவ்வாறாக 'ரமணாஞ்சலி' என்ற இசைக்குழு தோன்றியது.*

*இசை அவருள் ஊறி அவரது வாழ்க்கையில் பெரும்பங்கு வகித்தது நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. ரமண பகவான் இயற்றிய மற்றும் பகவான்மீது மற்ற அன்பர்கள் புனைந்த பாடல்களை இசையமைத்து புதிய வடிவில் வெளியிட்ட இவரது முயற்சியில் திருமதி. நடராஜன் அவர்களின் அயராத உழைப்பும் ஈடுபாடும் மிளிர்வதை அறியலாம். இவர் இசை உலகிற்குப் பல கலைஞர்களை 'ரமணாஞ்சலி' மூலமாக அறிமுகப்படுத்தியுள்ளார். மேலும் இவர் சுமார் 500 இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.*

*ரமண உபதேசங்களை, இசைவடிவாகப் பெரும் முயற்சியுடன், பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளும்படி ஸ்வர-தாளக் குறிப்புகளுடன் 'ரமண சங்கீதம்' என்ற பெயரில் நான்கு பாகங்களாக அளித்துள்ளார்.*

*தமது ஆன்மிக சாதனையின் மார்க்கமாக இசையைத் தேர்ந்தெடுத்து ரமண உபதேசத்தை இசைமூலம் பரப்பிவந்த திருமதி சுலோசனா நடராஜன் ஏனைய அன்பர்களையும் அதில் திளைக்கச் செய்து பாராட்டுதற்குரிய சீரிய தொண்டாற்றி வந்தார். அவரது மகள்களான டாக்டர் சாரதா நடராஜன் மற்றும் அம்பிகா காமேஷ்வர் ஆகிய இருவரும் தீவிர ரமண பக்தைகளாவர். அவ்விருவரும் தாய்-தந்தை அடியொற்றி ரமணத் தொண்டு ஆற்றி வருவதுடன் அவர்களது இன்றைய வாரிசுகளும் ரமணப் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது வியக்கத்தக்கது.*

*ஆகஸ்டு மாத முதல் வாரத்தில் சிறிது நோய்வாய்ப்பட்ட ஸ்ரீமதி சுலோசனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். ஆகஸ்டு 23 அன்று இரவு 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் 'சரணாகதி' பாடலின் 'தருணம் இதுவன்றோ' என்னும் வரிகளை உடனிருந்தோர் பாடிக் கொண்டிருக்கும்பொழுது, அவரது உயிர் பிரிந்து அருணாசல ரமணரிடம் ஒடுங்கியது. 'சரணாகதி'யில் தொடங்கிய அவரது ரமணப் பணி, 'சரணாகதி'யில் அடங்கியது.*

*அன்னாரைப் பிரிந்து வாழும் குடும்பத்தாருக்கு ரமணோதயம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## WhatsApp Broadcasting

ஸ்ரீரமணாச்ரமம் ரமண அன்பர்கள் பயன்பெறும் வகையில் WhatsApp Broadcast துவக்கியுள்ளது. இதில் ஆச்ரம நிகழ்வுகள் மற்றும் ரமண உபதேசங்கள் WhatsApp மூலம் அனுப்பப்படும். பதிவு செய்ய விரும்பும் அன்பர்கள், உங்கள் மொபைல் 'Whatsapp'இல் 'Ramana' என்று தட்டச்சு செய்து 9442221896 என்ற எண்ணிற்கு அனுப்பவும்.

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** ரமணாலயம் | ......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ......... | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | ......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ......... | 9486576687 |
| **ஓசூர்** அசோக்குமார் | ......... | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




சென்னை ரமண கேந்திரம்
கல்வி உதவித் தொகை வழங்கும் விழா
21-8-2016



Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

